bible educational services

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் நிலை 3 & 4

## தொடர் A

பாடம் 7-12

INDIA
bible educational services
WWW.besweb.com

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியல்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேசமாக ஆப்பிரிக்கா மட்டும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் யு 4 லும் சில பகுதிகளில் யு5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் "நாம் கற்றுக்கொள்வது" என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்**: ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிக்கூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

**பாட ஒழுங்கு:** ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

"சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்"

| | நிலை 0 (ப்ரீ-ஸ்கூல்)<br>நிலை 1 (5-7 வயது)<br>நிலை 2 (8-10 வயது) | நிலை 3 (11-13 வயது) | நிலை 4 (14+ வயது) |
|---|---|---|---|
| தொடக்கநிலை தொடர்பாடங்கள் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் |
| தொடர் A | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆதி கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல் & வீழ்ச்சி<br>2. ஆரம்பகால முன்னேற்றங்கள் - ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் B | 1. கிறிஸ்துவின் ஆரம்ப வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. சுவிசேஷம் எழுதிய ஆசிரியர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபும் அவருடைய குடும்பமும்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர். 2:42 - முன்னே இருக்கும் வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் C | 1. தானியேல்<br>2. அதிக அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. அதிக அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள் - ப.ஏ.<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சொன்னவை<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. அதிக ப.ஏ. கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

| | A7 - நிலை 3<br>பாடம் 1 - யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு - வஞ்சகன் | A7 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு - வஞ்சகன் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 25: 21–34 மற்றும் ஆதியாகமம் 27: 1–29***<br>**முக்கிய வசனம் –*சங்கீதம் 32: 1***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் பாவம்செய்யும்போது தேவன் நம்மை மன்னிக்க முடியும்.<br>2. தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 25: 19–34 மற்றும் ஆதியாகமம் 27: 1–41***<br>**முக்கிய வசனம் – *ரோமர் 5: 8***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஏமாற்றுவதும் பொய்சொல்வதும் நமக்குத் பிரச்சனைகளையும் மற்றும் மகிழ்ச்சியின்மையையும் கொண்டுவருகின்றன.<br>2. யாக்கோபுடைய வாழ்வில் வைத்திருந்தது போலவே, நம் எல்லோருடைய வாழ்க்கையைப் பற்றியும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். |
| அறிமுகப்படுத்துங்கள் | சோதனை என்றால் என்னவென்பதைக் குறித்தும், நாம் எந்தெந்த சூழ்நிலைகளில் பொய் சொல்ல மிகவும் சோதிக்கப்படுகிறோம் என்பதைக் குறித்தும் விவாதிக்கவும். இந்த சூழ்நிலைகளில் சிலவற்றை பட்டியலிடவும், ஏன் பொய் சொல்லக்கூடும் என்று விவாதிக்கவும். பொறாமையைக் குறித்து பேசுங்கள், மேலும் நாம் பொறாமைப்படக்கூடிய சூழ்நிலைகளைப் பற்றியும், நாம் ஏன் அவ்வாறு காணப்படுவோம் என்பதைக் குறித்தும் பேசுங்கள். | நமது செயல்களின் விளைவுகளுடன் நாம் வாழ வேண்டியிருக்கிறது. உங்கள் சொந்த வாழ்க்கையில் இதைப் பற்றிக் கூறவும் –எ.கா. நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர், ஏமாற்றியதால் அல்லது பொய் சொன்னதால் – ஒருவேளை போலீசாருடன் கூட எப்போதாவது சிக்கலில் மாட்டியிருக்கிறாரா?<br>சட்டத்தை மீறுவது (பாவங்கள்) ஏன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். |
| முடியுங்கள் | **பைபிள்கதையைக் கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஈசாக்கு ஜெபம் செய்தபின்,ரெபெக்காள் இரட்டையர்களைப் பெற்றாள்.ஏசா மூத்தவன் யாக்கோபு இளையவன்.<br>2. வீட்டில் பாரபட்சம் இருந்தது;ஈசாக்கு வேட்டைக்காரனாகிய ஏசாவை நேசித்தார், ரெபெக்காள் வீட்டில் தங்குவதற்கு விரும்பிய யாக்கோபை நேசித்தாள்.<br>*3. பண்டைய மத்திய கிழக்கு நாடுகளில் சேஷ்டபுத்திரபாகத்தின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.*<br>4. ஏசாவேட்டையாடிக்கொண்டிருந்து பசியாயிருந்தான்; யாக்கோபு கூழ் காய்ச்சிக்கொண்டிருந்தான், ஆனால் தன்னுடைய சகோதரன் சேஷ்டபுத்திரபாகத்தை விட்டுவிட்டால் மாத்திரமே, அவனுக்குச் சிறிது தருவான்.<br>5. ஈசாக்கு முதிர்வயதானபோது, தன் மூத்த மகனுக்கு ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுக்க விரும்பினார். கிட்டத்தட்ட குருடனாக இருந்த ஈசாக்கை வஞ் சிக்க ரெபெக்காளும் யாக்கோபும் திட்டமிட்டனர். தன் தகப்பனுக்கு உணவளிப்பதற்காக ஏசாவேட்டையாடுகையில்,ரெபெக்காளும் யாக்கோபும் விரைவாக சமைத்தார்கள், மாறுவேடமிட்ட யாக்கோபு தான் ஏசா என ஈசாக்கிடம் சொன்னான், அதனால் மூத்த மகனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றான்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – ஏசா தனது சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்கிறான், யாக்கோபு ஏசாவை ஏமாற்றுகிறான். (I)** | **பைபிள்கதையைக் கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஈசாக்கு ஜெபம் செய்தபின்,ரெபெக்காள் இரட்டையர்களைப் பெற்றாள்.ஏசா மூத்தவன் யாக்கோபு இளையவன்.<br>2. வீட்டில் பாரபட்சம் இருந்தது;ஈசாக்கு வேட்டைக்காரனாகிய ஏசாவை நேசித்தார், ரெபெக்காள் வீட்டில் தங்குவதற்கு விரும்பிய யாக்கோபை நேசித்தாள்.<br>3. *பண்டைய மத்திய கிழக்கில் சேஷ்டபுத்திரபாகத்தின்முக்கியத்துவத்தை விளக்குங்கள்.*<br>4. ஏசா வேட்டையாடிக்கொண்டிருந்து பசியாயிருந்தான்; யாக்கோபு கூழ் காய்ச்சிக்கொண்டிருந்தான், ஆனால் தன்னுடைய சகோதரன் சேஷ்டபுத்திரபாகத்தை விட்டுவிட்டால் மாத்திரமே, அவனுக்குச் சிறிது தருவான்.தான் மிகவும் தந்திரசாலியும் சுயநலக்காரனுமாயிருக்கிறான் என்பதை வெளிப்படுத்தினான்.<br>5. ஈசாக்கு முதிர்வயதானபோது, தன் மூத்த மகனுக்கு ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுக்க விரும்பினார். கிட்டத்தட்ட குருடனாக இருந்த ஈசாக்கை வஞ்சிக்க ரெபெக்காளும் யாக்கோபும் திட்டமிட்டனர். தன் தகப்பனுக்கு உணவளிப்பதற்காக ஏசா வேட்டையாடுகையில், ரெபெக்காளும் யாக்கோபும் விரைவாக சமைத்தார்கள், மாறுவேடமிட்ட யாக்கோபு தான் ஏசா என ஈசாக்கிடம் சொன்னான், அதனால் மூத்த மகனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றான்.<br>*6. ஏமாற்றுவதைப் பற்றிய இந்த உதாரணத்தைக் கலந்துபேசி, நேர்மையின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.*<br>7. ஏசா திரும்பி வந்தபோது அவன் மிகவும் கோபமாக இருந்தான், ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்படி தகப்பனிடம் கெஞ் சினான், ஆனால் அது மிகவும் தாமதமாகிவிட்டது. அவன் தனது சேஷ்டபுத்திரபாகத்தையும் ஆசீர்வாதத்தையும் இழந்துவிட்டான்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI-ஏசா தனது சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்கிறான், யாக்கோபு ஏசாவை ஏமாற்றுகிறான்.(I)** |
| மீள்பார்வை | இந்த பாடத்தில் யாக்கோபு செய்த பாவங்களைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். நமது எந்த வகையான பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும்? கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் சிந்தியுங்கள். மாணவர்களுடைய அநேக பதில்களைக்கொண்டு ஒரு கிராஃபிட்டி போர்டையோ, அல்லது ஒரு சிலந்தி வரைபடத்தையோ செய்யுங்கள்.<br>நாம் அல்லது ஒருவேளை மற்றவர்கள் தேவனிடத்தில் எப்படி மன்னிப்புக் கேட்கலாம் என்பதைக் கவனியுங்கள். உதவிக்காக ***சங்கீதம் 32: 1–5***ஐ வாசியுங்கள். | தனது சகோதரனுடைய மற்றும் தாயினுடையப் பொய்யையும் வஞ் சனையையும்அறிந்தபோது ஏசா எப்படி உணர்ந்திருப்பான் என்பதை கவனியுங்கள்.<br>நீங்கள் பொய் சொன்னதால் அல்லது ஏமாற்றியதால் பிரச்சனையில் மாட்டிக்கொண்ட நேரங்களை நினைத்துப்பாருங்கள், நீங்கள் எதிர்காலத்தில் வித்தியாசமாக வாழ முயற்சிக்கும் இரண்டு வழிகளை எழுதுங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>ஒரு காகிதத்தில் நீங்கள் செய்த சில பாவங்களை எழுதுங்கள்.பின்பு அதைக் கிழித்து, குப்பைத் தொட்டியில் போடவும், குப்பையை நொறுக்கும் இயந்திரத்தில் போடவும். பின்னர் மாற்றாக மணலில் அல்லது தூசி நிறைந்த இடத்தில் சில பாவங்களை எழுதுங்கள். பிறகு தரையைத் துடைக்கவும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. ***எரேமியா 29: 11***ல் காண்பதைப் போன்ற பைபிளின் கொள்கைகளின் அடிப்படையில் தேவன் யாக்கோபுக்கு வைத்திருந்தத் திட்டங்களையும், ஒருவேளை உங்கள் வாழ்க்கையைக் குறித்தும் வைத்திருக்கக்கூடிய திட்டங்களையும் கவனியுங்கள்.<br>2. உங்கள் எதிர்காலத்தைப் பற்றி இன்னும் அதிகமாகக் காண்பிப்பதற்கு தேவனை அழையுங்கள். நேர்மறையாக இருங்கள். |

| | A7 - நிலை 3<br>**பாடம் 2 - யாக்கோபின் வாழ்க்கை**<br>**தலைப்பு - கனவு காண்பவன்** | A7 - நிலை 4<br>**ஆராய்ச்சி 2 - யாக்கோபின் வாழ்க்கை**<br>**தலைப்பு - கனவு காண்பவன்** |
|---|---|---|
| | **வேதப் பகுதி - *ஆதியாகமம் 27: 41-46 & ஆதியாகமம் 28: 10-22***<br>**முக்கிய வசனம் -*ஆதியாகமம் 28: 16***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. யாக்கோபு தவறு செய்தபோதும் தேவன் அவருடனிருந்து அவரில் மிகவும் அன்புகூர்ந்தார்.<br>2. அவ்வாறே நம்மிடத்தும் அன்புகூருவார் என்று சொல்லலாம் வேதப்பகுதி: | **வேதப் பகுதி - *ஆதியாகமம் 27: 41-46 & ஆதியாகமம் 28: 1-22***<br>**முக்கிய வசனம் - *ஆதியாகமம் 28: 16***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. யாக்கோபு குளறுபடி செய்திருந்தாலும்,தேவன் தன்னோடு பேசி வாக்குறுதிகளை அளித்த சில அற்புதமான சந்திப்புகளை அவரது வாழ்க்கையில் கொண்டிருந்தார்.<br>2. தேவன் யாக்கோபை நடத்தியது போலவே எப்போதும் நம்மையும் நடத்துகிறார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நாம் எதைச் செய்தாலும் நமது வாழ்க்கையைத் தேவன் எவ்வாறு தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள்!நாம் மற்றவர்களுடன் தொடர்புகொள்வதற்கான வழிகளைப் பற்றி யோசித்துப்பாருங்கள், சில சமயங்களில் தேவன் நம்மிடம் பல்வேறு வழிகளில் பேசுகிறார் என்பதையும் சிந்தித்துப்பாருங்கள்.தேவன் இன்று நம்மிடம் பேசக்கூடிய வழிகளைப் பற்றி சிந்திக்கும்படி மாணவர்களிடம் சொல்லுங்கள். | தேவன் மீது விசுவாசம் வைத்திருந்த ஒருவருக்கு ஏற்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வியத்தகு அனுபவம் / ஆச்சரியமளிக்கும் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும்படி மாணவர்களைக் கேட்கவும்.<br>அத்தகைய விஷயங்களை அனுபவிக்க நாம் செம்மையானவராக இருக்க வேண்டியது கட்டாயமா? |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு ஏசா யாக்கோபைக் கொல்ல யோசிக்கிறான். ஏசாவின் கோபம் தணியும் வரை அவனது மாமா லாபனுடன் தங்கியிருக்கும்படி ரெபெக்காள் யாக்கோபுக்குச் சொல்கிறாள்.<br>2. ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார், அவன் பதான் அராமுக்குப் போகிறான்.<br>3. யாக்கோபு இரவில் தங்கியபோது ஒரு கனவு காண்கிறான். அவன் பரலோகத்திற்கு வழிவகுக்கும் ஒரு மாடிப்படியைப் பார்க்கிறான். அப்பொழுது கர்த்தர் அவனுடனே பேசி, அவன் குடும்பத்தார் சுதந்தரிக்கப்போகும் தேசத்தைக் குறித்துப் பேசி, அவனது பிரயாணத்தில் அவனோடே கூட இருப்பதாகவும் வாக்குத்தத்தம் கொடுக்கிறார்;<br>4. யாக்கோபு எழுந்திருந்து, அந்த இடத்தை பெத்தேல் என்று அழைத்தான், அதற்கு தேவனுடைய ஆலயம் என்று பொருள்.<br>5. யாக்கோபு தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணினான்.தேவன் அவனை கவனித்துக் கொண்டால், கர்த்தர் யாக்கோபுக்கு தேவனாயிருப்பார்!<br>6. பெத்தேலில் யாக்கோபிருந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகளைக் கவனியுங்கள்.<br>7. அவனது பாவத்தை கணக்கிடாமல், யாக்கோபுக்கு தேவன் காண்பித்த அன்பைப் பற்றி கலந்துபேசி விவரியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - தேவன் கனவில் யாக்கோபுடன் பேசுகிறார். (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு ஏசா யாக்கோபைக் கொல்ல யோசிக்கிறான். ஏசாவின் கோபம் தணியும் வரை அவனது மாமா லாபனுடன் தங்கியிருக்கும்படி ரெபெக்காள் யாக்கோபுக்குச் சொல்கிறாள்.<br>2. ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார், அவன் பதான் அராமுக்குப் போகிறான்.<br>3. யாக்கோபு இரவில் தங்கியபோது ஒரு கனவு காண்கிறான். அவன் பரலோகத்திற்கு வழிவகுக்கும் ஒரு மாடிப்படியைப் பார்க்கிறான். அப்பொழுது கர்த்தர் அவனுடனே பேசி, அவன் குடும்பத்தார் சுதந்தரிக்கப்போகும் தேசத்தைக் குறித்தும், அவனது பிரயாணத்தில் அவனோடே கூட இருப்பதாகவும் வாக்குத்தத்தம் கொடுக்கிறார்;<br>4. யாக்கோபு எழுந்திருந்து, அந்த இடத்தை பெத்தேல் என்று அழைத்தான், அதற்கு தேவனுடைய ஆலயம் என்று பொருள்.<br>5. யாக்கோபு தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணினான்.தேவன் அவனை கவனித்துக் கொண்டால், கர்த்தர் யாக்கோபுக்கு தேவனாயிருப்பார்!<br>6. அவனது பாவத்தை கணக்கிடாமல், யாக்கோபுக்கு தேவன் காண்பித்த அன்பைப் பற்றி கலந்துபேசி விவரியுங்கள்.<br>7. தேவன் நம் வாழ்வில் செயல்படும்போது நமக்கு ஏற்படப்போகும் ஆச்சரியங்களைப் பற்றி விவாதித்து விளக்கவும்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - தேவன் கனவில் யாக்கோபுடன் பேசுகிறார். (I)** |
| **மீள்பார்வை** | சிறிய குழுக்களாகப் பிரிந்து, “தேவன் இங்கே என்னுடன் இருந்தார்” என்று தலைப்பு எழுதி, நீங்கள் சென்றிருந்த இடங்களில் எப்போதாவது தேவன் உங்களுடன் இருப்பதை உணர்ந்ததைக்குறிப்பிடுங்கள். அன்றாட வாழ்வில் ***எபிரேயர் 13: 5***ன் முக்கியத்துவம் பற்றி யோசித்துப்பாருங்கள். | தேவன் உங்களுக்கு எப்போதாவது கனவு கொடுத்திருக்கிறாரா? நீங்கள் எப்போதாவது ஆவிக்குரிய அர்த்தத்துடன் கனவு கண்டிருக்கிறீர்களா? அது என்ன அர்த்தம் உடையதாய் இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? வாழ்க்கையில் எந்த விதத்தில் அது உங்களுக்கு உதவியது?<br>இன்று தேவன் வேறெந்த வழிகளில் மக்களிடம் பேச முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள்.தங்கள் அன்றாட வாழ்வில் மாணவர்களுக்குப் பொருத்தமான வகையில் அவர் எந்தவிதமான வாக்குறுதிகளை அளிப்பார்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. நீங்கள் பாவத்தைச் செய்திருந்த சூழ்நிலையிலும் தேவன் உங்களை புறக்கணியாமல் உங்களை ஆசீர்வதித்திருக்கிறதை அறிந்துகொண்ட அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா?<br>2. இந்த வகையான அனுபவம் உங்களை எப்படி உணரச்செய்கிறது?<br>3. தேவன் உங்களிடம் பேசுவதை நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. ஆவிக்குரிய கனவுகளை ஆராய்ச்சி செய்யுங்கள், அந்த வகையில் தேவன் உங்களோடு பேச திறந்த மனதோடிருங்கள்.<br>2. தேவன் செய்கிற நான்கு வாக்குறுதிகளை பைபிளில் பாருங்கள். இவைகளைப் பயன்படுத்தி ஜெபியுங்கள். |

| | A7 – நிலை 3<br>பாடம் 3 – யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு – ஏமாற்றங்கள் | A7 – நிலை 4<br>ஆராய்ச்சி 3 – யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு – ஏமாற்றங்கள் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 29: 1–30*<br>முக்கிய வசனம் –*கலாத்தியர் 6: 7*<br>நாம் கற்றுக்கொள்வது:**<br>1. வாழ்க்கை என்பது விதைப்பதும் மற்றும் அறுவடைசெய்வதும் போன்றது.<br>2. வாழ்க்கை எப்போதுமே எளிதாய் இருக்கும் என்று எந்த வாக்குறுதிகளும் இல்லை. | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 29: 1–30 & 31: 1–21*<br>முக்கிய வசனம் – *கலாத்தியர் 6: 7*<br>நாம் கற்றுக்கொள்வது:**<br>1. வாழ்க்கை என்பது விதைப்பதும், அறுவடை செய்வதும் போன்றது.<br>2. தேவன் உத்தேசிப்பதையே சொல்கிறார்.<br>3. மற்றவர்கள் நம்மை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதே விதத்தில் நாம் அவர்களை நடத்தவேண்டும். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | தோட்டங்களில் அல்லது பண்ணைகளில், விதைப்பு மற்றும் அறுவடையைப் பற்றிப் பேசுங்கள்.மேலும் என்ன விதை விதைக்கப்பட்டதோ அதே பயிர்தான் விளையும் என்பதை விளக்கவும்.நமது நடத்தை, நல்லதாக இருந்தாலும் அல்லது கெட்டதாக இருந்தாலும் நிச்சயம் அதற்கு விளைவு உண்டு என்பதைப் பற்றிப் பேசுங்கள். நாம் விதைப்பதையே அறுவடை செய்கிறோம்!<br>மோசமாக நடந்து பின் அதன் விளைவுகளை அறுவடை செய்த சில நவீனகால மக்களைப் பற்றிப் பேசுங்கள். | தோட்டங்களில் அல்லது பண்ணைகளில், விதைப்பு மற்றும் அறுவடையைப் பற்றிப் பேசுங்கள்.மேலும் என்ன விதை விதைக்கப்பட்டதோ அதே பயிர்தான் விதையும் என்பதை விளக்கவும். நமது நடத்தை, நல்லதாக இருந்தாலும் அல்லது கெட்டதாக இருந்தாலும் நிச்சயம் அதற்கு விளைவு உண்டு என்பதைப் பற்றிப் பேசுங்கள்.நாம் விதைப்பதையே அறுவடை செய்கிறோம்!<br>மோசமாக நடந்து பின் அதன் விளைவுகளை அறுவடை செய்த சில நவீனகால மக்களைப் பற்றிப் பேசுங்கள். விதைத்த செயல்களுக்கான விளைவுகளை அறுவடைசெய்த நபர்களின் உதாரணங்களுக்காக, உள்ளூர் செய்தித்தாள்கள் அல்லது வதந்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளைப் பாருங்கள். அவர்களின் படத்தை வெட்டி வார்த்தைகளை எழுதிச் சேர்த்து ஒரு படத்தொகுப்பாக்குங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:<br>கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. யாக்கோபு ஆராமுக்கு வந்து தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிற மேய்ப்பர்களைச் சந்திக்கிறான்.<br>2. அவனது மாமன் மகள் ராகேல், தனது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறாள், யாக்கோபு அவளுக்கு உதவிசெய்கிறான். யாக்கோபு வந்திருக்கிறான் என்று அவள் தன் தகப்பனாகிய லாபானிடம் சொல்லும்போது, அவனை வீட்டிற்கு வரவேற்கிறார்.<br>3. யாக்கோபு லாபானிடம் வேலை செய்கிறான். 7 வருடங்கள் வேலைசெய்தால், யாக்கோபோடு பிரியமாயிருந்த ராகேலை திருமணம் செய்து தருவதாக லாபான் வாக்குறுதி அளிக்கிறார்.<br>4. திருமணம் முடிந்த பிறகு, தான் ஏமாற்றப்பட்டுவிட்டதை யாக்கோபு கண்டுபிடிக்கிறான், ராகேலின் சகோதரியான லேயாலை அவனுக்குத் திருமணம் செய்துவைத்தார்கள்.<br>5. பின்னர் ராகேல் மனைவியாகக் கொடுக்கப்பட்டாள், அவளுக்காக 7 வருடங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது.<br>6. யாக்கோபு, தந்திரக்காரன், தனது சொந்த வீட்டில் முன்பு தான் காண்பித்த ஏமாற்றுச் செயலுக்குப் பல ஆண்டுகளுக்குப்பின் அதன் விளைவுகளை அறுவடைசெய்வதைப் பற்றி விவாதிக்கவும்.<br>7. மக்கள் ஏமாற்றத்தைச் சந்திக்கும் பல வழிகளையும் விவாதிக்கவும்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.<br>3ம் பாடத்தை முடியுங்கள். காண்பியுங்கள்: FBI – யாக்கோபு அவரது திருமணத்தில் ஏமாற்றப்படுகிறார்.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:<br>கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. யாக்கோபு ஆராமுக்கு வந்து தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிற மேய்ப்பர்களைச் சந்திக்கிறான்.<br>2. அவனது மாமன் மகள் ராகேல், தனது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறாள், யாக்கோபு அவளுக்கு உதவிசெய்கிறான். யாக்கோபு வந்திருக்கிறான் என்று அவள் தன் தகப்பனாகிய லாபானிடம் சொல்லும்போது, அவனை வீட்டிற்கு வரவேற்கிறார்.<br>3. யாக்கோபு லாபானிடம் வேலை செய்கிறான். 7 வருடங்கள் வேலைசெய்தால், யாக்கோபோடு பிரியமாயிருந்த ராகேலை திருமணம் செய்து தருவதாக லாபான் வாக்குறுதி அளிக்கிறார்.<br>4. திருமணம் முடிந்த பிறகு, தான் ஏமாற்றப்பட்டுவிட்டதை யாக்கோபு கண்டுபிடிக்கிறான், ராகேலின் சகோதரியான லேயாலை அவனுக்குத் திருமணம் செய்துவைத்தார்கள்.<br>5. பின்னர் ராகேல் மனைவியாகக் கொடுக்கப்பட்டாள், அவளுக்காக 7 வருடங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது.<br>6. யாக்கோபு, தந்திரக்காரன், தனது சொந்த வீட்டில் முன்பு தான் காண்பித்த ஏமாற்றுச் செயலுக்கு பல ஆண்டுகளுக்குப்பின் அதன் விளைவுகளை அறுவடைசெய்வதைப் பற்றி விவாதிக்கவும்.<br>7. பிற்பாடு தேவன் யாக்கோபை தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகச் சொல்கிறார்.தேவன் அவனை ஆசீர்வதித்துள்ளார், மேலும் அவனுக்குப் பெரிய மந்தைகளும் ஒரு பெரிய குடும்பமும் உள்ளது. தான் லாபானை விட்டுப் பிரிந்து போவதை கூறவில்லை, லாபான் வீட்டில் இல்லாத சமயத்தில் ஓடிப்போகிறான்.<br>8. யாக்கோபின் தோல்விகளைப் பற்றி யோசித்துப் பாருங்கள், வாழ்க்கையானது பரிபூரணத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருந்தாலும், தேவன் எவ்வாறு இன்றும் கிரியைசெய்கிறார் என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.<br>ஆராய்ச்சி 3ஐமுடியுங்கள். காண்பியுங்கள்: FBI – யாக்கோபு அவரது திருமணத்தில் ஏமாற்றப்படுகிறார் (I)** |
| **மீள்பார்வை** | மேலே உள்ள எண்.7ல் இருந்து எடுத்துக்காட்டுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை ஒரு பெரிய வகுப்பு சார்ட்டில் ஒவ்வொருவரும் தங்களுடையதைப் பார்க்கும் விதத்தில் எழுதுங்கள். (பேப்பரில் ஒட்டக்கூடிய குறிப்பு பசைத்தாள்(post-it ) கிடைக்கப்பெற்றால், அதற்குப் பதிலாக இதைப் பயன்படுத்தலாம்) | மக்களின் வாழ்க்கையில் விதைப்பு மற்றும் அறுப்புக்கான உதாரணங்களை முதலில் எதிர்மறையான வழியிலும் பின்னர் நேர்மறையான வழியிலும் சிந்தியுங்கள். ஒவ்வொன்றிலும் இரண்டு பதில்களை வழங்க முயற்சிசெய்யுங்கள், அதை எழுதலாம் அல்லது ஓவியமாகவும் வரையலாம். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. நீங்கள் கடைசியாக எப்பொழுது ஏமாற்றமடைந்தீர்கள்?<br>2. நீங்கள் அதை எப்படிச் சரியாக சமாளித்தீர்கள்?<br>3. நீங்கள் அதைச் சமாளிக்க அதைவிட சிறந்த வழி இருந்திருக்குமா?<br>4. விதைப்பு மற்றும் அறுப்பு பற்றிய மூன்று எடுத்துக்காட்டுகளை இரண்டு கட்டங்களின் கீழ் பட்டியலிட முடியுமா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. உங்களுக்குத் தெரிந்த ஒரு ஏமாற்றுக்காரன் பின்னர் ஏமாற்றப்பட்டதை அறிவீர்களா?<br>2. குறிப்பிட்ட, தவறான நடத்தை மீண்டும் வந்து மக்களை வேட்டையாடுவதைப் பற்றிய பிற உதாரணங்களை நீங்கள் நினைவுகூர முடிகிறதா? |

| | A7 – நிலை 3<br>பாடம் 4 – யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு – கண்டுபிடித்தல் | A7 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 – யாக்கோபின் வாழ்க்கை<br>தலைப்பு – கண்டுபிடித்தல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 32: 1-21 மற்றும் ஆதியாகமம் 33: 1-11***<br>**முக்கிய வசனம் -*1 யோவான் 1: 9***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. யாக்கோபின் வாழ்வில் நடந்தது போலவே, மக்கள் நமக்குத் தீமை செய்திருந்தாலும் அவர்களை தேவனுடைய உதவியோடு மன்னிக்க முடியும்.<br>2. நாம் மனந்திரும்பி, மன்னிக்கும்படி மன்றாடும்போது தேவன் நம்மை மன்னிக்கிறார். | **வேதப் பகுதி – *ஆதியாகமம் 32: 1-32 மற்றும் ஆதியாகமம் 33: 1-17***<br>**முக்கிய வசனம் – *1 யோவான் 1: 9***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. யாக்கோபு தனது வாழ்க்கையில் ஒரு நெருக்கடியை சந்தித்தார், ஆனால் நீண்ட காலம் பிரிந்திருந்த தனது சகோதரனை சந்திப்பதைக் காட்டிலும் தேவனை சந்திப்பது யாக்கோபுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.<br>2. இப்போது யாக்கோபு வயதானவராக இருந்தாலும்,யாக்கோபின் வாழ்க்கையில் தேவன் இன்னும் புதிய திட்டங்களை வைத்திருந்தார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | யாக்கோபு தேவனுக்குக் கீழ்ப்படிந்து தன் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார் என்று மாணவர்களை நினைப்பூட்டுங்கள், ஆனால் அவர் ஏசாவைச் சந்திக்கக் கவலைப்படுகிறார், காரணம்பல வருடங்களுக்கு முன்னர் அவரைக் கொலைசெய்யப்போவதாக ஏசா பயமுறுத்தியிருந்தார். ஏசா அவரை மன்னிக்கத் தயாராக இருந்திருப்பாரா என்பதை யோசித்துப்பாருங்கள்.<br>நீங்கள்: அ) மன்னிக்கும்போது, ஆ) மன்னிக்காதபோது வழக்கமாக உங்களுக்கு நடக்கும் சில விஷயங்களை பட்டியலிடுங்கள். | ஒரு விசேஷ நபரை சந்திப்பதில் சம்பந்தப்பட்டுள்ள காரியங்களைப் பற்றி பேசவும், அதற்காக நாம் எப்படி ஆயத்தமாவோம் என்பதைப் பற்றியும் பேசவும். பல வருடங்களாக தேவனோடு எந்த தொடர்பும் இல்லாமலிருந்த யாக்கோபு இப்போது தேவனைச் சந்திக்கிறார். யாக்கோபு இப்போது பழைய யாக்கோபாக இருக்கவில்லை மாற்றமடைந்தார், ஏசாவை சந்திப்பதற்கான உதவியை அவர் பெற்றுச்சென்றார். முடிந்தால், "தி எண்ட் ஆஃப் தி ஸ்பியர்" என்பதை இணையதளத்தில் தேடிப்பாருங்கள், அல்லது ஜிம் எலியட்டின் மனைவி தன் கணவரைக் கொன்றவர்களை மன்னிப்பதை டிவிடியில் பார்க்கலாம் அல்லது புத்தகத்தில் படிக்கலாம். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. யாக்கோபு பல ஆண்டுகள் கழித்து வீட்டுக்குத் திரும்ப ஏன் பயந்தான் என்பதற்கான காரணங்களைக் கவனியுங்கள்.<br>2. ஏசா 400 பேருடன் எதிர்கொள்ள வருகிறான் என்று அறிந்தவுடன் யாக்கோபு மிகவும் பயப்படுகிறான்.<br>3. யாக்கோபு மூன்று காரியங்களைச் செய்கிறான்:<br>1) குடும்பத்தினர் ஒரு பகுதியாவது பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் குடும்பத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கிறான்(32: 7-8),<br>2) ஜெபிக்கிறான் (32: 9-12),<br>3) ஏசாவுக்குப் பரிசுகளை அனுப்புகிறான். (32: 13-16)<br>4. அன்றிரவு யாக்கோபு தேவனுடன் மிகவும் விசித்திரமான அனுபவத்தைப் பெற்று அவரின் ஆசீர்வாதத்தை நாடுகிறான். (32: 22-31).<br>5. யாக்கோபின் பயங்கள் ஆதாரமற்றவை.ஏசா அவனைத் தழுவி, அவனை மன்னித்துவிட்டதாக தெரிகிறது. யாக்கோபு தன்னுடைய குடும்பத்தை அறிமுகப்படுத்தி, தன்னுடைய பரிசுகளை ஏற்றுக்கொள்ளும்படி ஏசாவை வருந்திக் கேட்கிறான்.<br>6. ஆனாலும் அவன் தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிப்போகவில்லை, உடனடியாகத் திரும்பாமல் இருந்து, ஏசாவை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுகிறான்.<br>7. *யாக்கோபு ஏன் சந்தேகப்பட்டான், தேவனுடைய வாக்குறுதிகளை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.*<br>8. *பயத்தை பகிர்ந்து கொள்ளுங்கள், மேலும் நாம் அவற்றிற்கு அதிக காலம் செலவழித்தாலும் கூட பெரும்பாலான பயங்கள் உண்மையிலேயே நடக்காது என்பதை விளக்குங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – யாக்கோபு கானானுக்குத் திரும்புகிறார், மேலும் யாக்கோபும் ஏசாவும் திரும்ப ஒற்றுமையாகின்றனர்.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. யாக்கோபு பல ஆண்டுகள் கழித்து வீட்டுக்குத் திரும்ப ஏன் பயந்தான் என்பதற்கான காரணங்களைக் கவனியுங்கள்.<br>2. ஏசா 400 பேருடன் எதிர்கொள்ள வருகிறான் என்று அறிந்தவுடன் யாக்கோபு மிகவும் பயப்படுகிறான்.<br>3. யாக்கோபு மூன்று காரியங்களைச் செய்கிறான்:<br>1) குடும்பத்தினர் ஒரு பகுதியாவது பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் குடும்பத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கிறான்(32: 7-8),<br>2) ஜெபிக்கிறான் (32: 9-12),<br>3) ஏசாவுக்குப் பரிசுகளை அனுப்புகிறான். (32: 13-16)<br>4. அன்றிரவு யாக்கோபு தேவனுடன் மிகவும் விசித்திரமான அனுபவத்தைப் பெற்று அவரின் ஆசீர்வாதத்தை நாடுகிறான். (32: 22-31).<br>5. யாக்கோபின் பயங்கள் ஆதாரமற்றவை.ஏசா அவனைத் தழுவி, அவனை மன்னித்துவிட்டதாக தெரிகிறது.யாக்கோபு தன்னுடைய குடும்பத்தை அறிமுகப்படுத்தி, தன்னுடைய பரிசுகளை ஏற்றுக்கொள்ளும்படி ஏசாவை வருந்திக் கேட்கிறான்.<br>6. ஆனாலும் அவன் தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிப்போகவில்லை, உடனடியாகத் திரும்பாமல் இருந்து, ஏசாவை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுகிறான்.<br>7. *யாக்கோபு ஏன் சந்தேகப்பட்டான், தேவனுடைய வாக்குறுதிகளை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.*<br>8. *நிஜ வாழ்க்கையில் மற்றவர்களை மன்னித்த மக்களின் கதைகளை கவனியுங்கள்.*<br>9. *நாம் மன்னிக்காமல் இருக்கும்போது, மற்றவர்களுக்கும் நமக்கும் நாம் எவ்வாறு தீமை செய்கிறோம் என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 4ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – யாக்கோபு கானானுக்குத் திரும்புகிறார், மேலும் யாக்கோபும் ஏசாவும் திரும்ப ஒற்றுமையாகின்றனர்.(I)** |
| **மீள்பார்வை** | மேலே உள்ள பகுதியை மனதில்கொண்டு, தேவனுக்கு ஒரு கடிதம் எழுத உங்கள் எண்ணங்களில் சிலவற்றைப் பயன்படுத்துங்கள்.<br>அவர்கள் தேவனிடம் என்ன அறிக்கை செய்யப்போகிறார்கள், என்ன கேட்கப்போகிறார்கள், மேலும் எதற்காக நன்றி செலுத்தப்போகிறார்கள் என்பதை மாணவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும் எனக் கூறுங்கள். | தேவனை சந்தித்தல் என்றால் என்ன அர்த்தம் என்பதைக் கவனியுங்கள்<br>அ) அது எப்போது செய்யப்படும்?<br>ஆ) அது எவ்வாறு செய்யப்படும்?<br>இ) அது ஏன் செய்யப்பட முடியும்?<br>தேவனோடு ஒரு தனிப்பட்ட சந்திப்பு எப்பொழுதாவது இருந்திருக்கிறதா என மாணவர்களிடம் கேளுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இந்த பைபிள் வசனத்திலிருந்து நம்முடைய வாழ்க்கை சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தைக் கற்றுக்கொள்ளலாம்?சமீபத்தில் மன்னிக்கப்பட்ட ஒருவரை குறிப்பிடுங்கள்.<br>2. ஒருவரை மன்னிக்க நாம் தேவனுடைய உதவியை கேட்கலாமா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>சமீபத்தில் அவர்களை மன்னிக்க தவறிய ஒருவர், அல்லது மன்னித்துவிட்ட யாராவது ஒருவர் இருக்கிறார்களா என மாணவர்களிடம் கேளுங்கள்.<br>1. இது அவர்களை எப்படி உணரச்செய்தது?<br>2. அவர்கள் மன்னிக்க வேண்டிய யாராவது இருக்கிறார்களா? |

| | A8 – நிலை 3<br>பாடம் 1 – ஒரு கிறிஸ்தவராக இருத்தல்<br>தலைப்பு – ஜெபம் என்றால் என்ன? | A8 – நிலை 4<br>ஆராய்ச்சி 1 – ஒரு கிறிஸ்தவராக இருத்தல்<br>தலைப்பு – ஜெபத்தைப் பற்றி கற்றுக்கொள்ளுதல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *சங்கீதம் 5: 1-8***<br>**முக்கிய வசனம் –*சங்கீதம் 5: 2***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் மிகவும் சிறப்புடையவர் என்பதால் ஜெபமும் மிகவும் சிறப்பானதாகும்.<br>2. நாம் தேவனிடம் பேசுவதும் அவர் சொல்வதை நாம் கேட்பதுமே ஜெபமாகும்.<br>3. சில நேரங்களில் நம் ஜெபங்களுக்கு பதில் கிடைப்பதில்லை, இதற்குக் காரணங்களும் உள்ளன. | **வேதப் பகுதி – *லூக்கா 11: 1-10 & மத்தேயு 6: 5-15***<br>**முக்கிய வசனம் – *லூக்கா 11: 9***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஜெபம் ஒரு பெரிய பாக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.<br>2. நாம் அடிக்கடி ஜெபம் செய்ய வேண்டும்.<br>3. நமது தனிப்பட்ட ஜெபத்தில் நம்மை மையப்படுத்தியே ஜெபம் செய்யக்கூடாது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | தொலைவில் உள்ள நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்புகொள்ள முயற்சிப்பதில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி யோசியுங்கள். தேவனுடன் நாம் தொடர்புகொள்ள முடியம் என்ற அற்புதமான உண்மையை சிந்தித்துப்பாருங்கள்.<br>ஜெபம்செய்கிறீர்களா என மாணவர்களிடம் கேளுங்கள். ஏன் செய்ய வேண்டும்? /ஏன் கூடாது? | தொலைவில் உள்ள நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்புகொள்ள முயற்சிப்பதில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி யோசியுங்கள். தேவனுடன் நாம் தொடர்புகொள்ள முடியம் என்ற அற்புதமான உண்மையை சிந்தித்துப்பாருங்கள்.<br>நாம் ஜெபிக்கவேண்டியக் காரியங்களை யோசித்துப்பாருங்கள். மாணவர்கள் ஜெபித்திருந்த காரியங்களுக்கு பதில் கிடைத்ததா என அவர்களிடமே கேளுங்கள். ஜெபத்திற்கு பதில் கிடைத்தபோது அவர்களுடைய உணர்வு எவ்வாறிருந்தது? |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. நாம் ஜெபிக்கும்போது யாரிடத்தில் பேசுகிறோமென்பதையும், சங்கீதத்தில் தாவீது பயன்படுத்துகிற தலைப்புகள் சிலவற்றைப் பற்றியும் சிந்தித்துப்பாருங்கள்.<br>2. ஒரு நாளில் எப்பொழுதெல்லாம் தாவீது ஜெபம் செய்தான், நாம் எப்பொழுது ஜெபிக்கலாம் என்பதைப் பற்றி விவாதியுங்கள்.<br>3. நம்முடைய ஜெபங்களை தேவன் கேட்கூடாதபடி தடைசெய்வது எது என்பதை இந்த சங்கீதத்திலிருந்து சிந்தித்துப் பாருங்கள்.<br>4. ஜெபத்தில் நாம் தேவனிடம் பேசுவதற்கு நம்மை ஆயத்தம்செய்ய உதவுகிற என்ன பாடங்களை நாம் இந்த சங்கீதத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.<br>5. தாவீதுக்கு தேவனிடத்தில் ஒரு விசேஷ உறவு இருந்தது, அவர் 2ம் வசனத்தில் என் ராஜா மற்றும் என் தேவன் என்று குறிப்பிடுகிறார். நாமும் எவ்வாறு அந்த விசேஷ உறவைக் கொண்டிருக்க முடியும்?<br>6. *ஜெபத்தின் முக்கியத்துவத்தை கலந்துபேசி விளக்குங்கள், எ.கா. ஜெபம் இல்லாமலிருந்தால் வாழ்க்கை எப்படியிருக்கும்?*<br>7. நாம் எதைப் பற்றி ஜெபம் செய்யலாம்?<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பொருத்தமான FBI எடுத்துக்காட்டுகள் இல்லை.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு ஜெபித்துக்கொண்டிருக்கையில், எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கும்படி அவருடைய சீடர்கள் அவரிடத்தில் கேட்டார்கள்.<br>2. ஜெபிக்கும்போது நாம் யாரிடம் பேசுகிறோம் என்பதைப் பற்றியும் இயேசு பயன்படுத்தும் தலைப்பைப் பற்றியும் யோசித்துப் பாருங்கள்?<br>3. தேவனை துதித்தலோடு இயேசு மாதிரியாக ஜெபத்தை தொடங்கினார். நம்முடைய ஜெபங்களில் எந்த பாகங்களில் துதி உண்டாயிருக்க வேண்டும்?<br>4. மாதிரியான ஜெபத்தில் இயேசு செய்த மூன்று முக்கிய கோரிக்கைகள் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.<br>5. அப்பொழுது இயேசு சொன்ன உவமையை வாசியுங்கள்***(லூக்கா 11: 5-10)*** மேலும் அதில் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு போதிக்கும் முக்கிய பாடத்தைப் பற்றி யோசியுங்கள்.<br>6. ***மத்தேயு 6: 5-15***ல் ஜெபத்தைப் பற்றி இயேசு கற்றுக்கொடுத்த பாடங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.<br>7. *காரியங்கள் தவறும்போது நாம் இன்னும் அதிகமாக ஜெபம் ஏன் செய்கிறோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.*<br>8. *சில சமயங்களில் ஜெபம் செய்வது நமக்குக் கடினமாகக் காணப்படுவதின் காரணத்தையும் சிந்தித்துப் பாருங்கள்*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – நள்ளிரவில் வந்த விருந்தாளியின் உவமை. (I)** |
| **மீள்பார்வை** | நமது ஜெபங்கள் தேவைப்படும் விஷயங்கள் உள்ளதா, மக்கள் உள்ளனரா?<br>நாம் எவ்வளவு அடிக்கடி ஜெபிக்க வேண்டும்? எவ்வளவு காலத்திற்கு ஜெபிக்க வேண்டும்?<br>வேதாகமத்தில் உள்ள மற்றொரு நபரின் ஜெபங்களைப் பற்றியும் அவர்களின் ஜெப வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் என்ன என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். | ஆய்வு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜெபத்தின் ஐந்து அம்சங்களைப் பற்றி சுருக்கமாகப் பேசுங்கள்; எல்லா அம்சங்களையும் கொண்டிருக்கும் ஜெபங்களைத் தயாரிப்பதற்காக குழுக்களில் மாணவர்களை வேலை செய்யக் கூறுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>ஜெபத்தில் நீங்கள் அதிகம் பேச வேண்டுமா அல்லது கவனிக்க வேண்டுமா?<br>ஜெபத்தில் தேவன் நம்மோடு என்ன சொல்ல வருகிறாரோ அதை நாம் கவனமாகக் கேட்கத் தொடங்குவோம். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>தனிப்பட்ட முறையில், குடும்பத்தில், உள்ளூர் சமூகத்தில், நாட்டில் மற்றும் உலகளாவிய நிலையில் ஜெபிக்க வேண்டிய சூழ்நிலைகளைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். பதில் கிடைத்த ஜெபங்களுக்கு நன்றியைத் தெரிவியுங்கள். |

| | A8 – நிலை 3<br>பாடம் 2 – ஒரு கிறிஸ்தவராக இருப்பது<br>தலைப்பு – தேவன் நம்முடைய ஜெபங்களைக் கேட்கிறாரா? | A8 – நிலை 4<br>ஆராய்ச்சி 2 – ஒரு கிறிஸ்தவராக இருப்பது<br>தலைப்பு – பைபிள் பற்றி கற்றல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *லூக்கா 18: 9-14***<br>**முக்கிய வசனம் –*யாக்கோபு 4: 6***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் தேவனிடம் ஜெபம் செய்வதற்கு ஆலயத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை: நாம்எந்த இடத்திலும் ஜெபிக்கலாம் எந்த நேரத்திலும் ஜெபிக்கலாம்.<br>2. நாம் ஜெபத்தில் தாழ்மையும் நேர்மையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 17: 10-14 & 2 தீமோத்தேயு 3: 14-17***<br>**முக்கிய வசனம் – *சங்கீதம் 119: 105***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பைபிளை வாசிப்பது முக்கியமானது.<br>2. பைபிளை நாம் நம்பலாம், ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையாகும் |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பாடம் 1-ல் ஜெபத்தைப் பற்றி கற்றுக்கொண்ட படிப்பினைகளை மீளாய்வுசெய்யவும்.<br>“வீழ்ச்சிக்கு முன் பெருமை வரும்“ என பைபிள் சொல்கிறது. ***(நீதிமொழிகள் 16: 18)***இதன் அர்த்தம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைச் சிந்தியுங்கள்.நிஜ வாழ்க்கையிலிருந்து அல்லது கற்பனையான ஒன்றிலிருந்து உதாரணத்தைச் சொல்லுங்கள். | மற்றெந்த புத்தகத்தைக் காட்டிலும் உலகில் அதிக பைபிள்கள் உள்ளன.<br>பல ஆண்டுகளாக பல நாடுகள் அதை எரித்தும் அல்லது புதைத்தும் தடைசெய்ய முயன்றன, ஆனால் பைபிள் இன்றும் நிலைநிற்கிறது. ஏனென்றால் இது தேவனுடைய வார்த்தையாகும். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. நாம் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் செய்ய வேண்டும் என இயேசு கற்பித்தார். ***(வசனம் 1)***<br>2. பெருமையும் மனத்தாழ்மையும் இல்லாதவர்கள் ஜெபிக்க சரியான மனநிலையில் இல்லை என்று அவர் விளக்கினார். ***(வசனம் 9)***<br>3. “நான்” என்ற வார்த்தையை எத்தனை முறை மதப்பற்றுள்ள மனிதன் (பரிசேயன்) பயன்படுத்தினான் என்று பாருங்கள்.<br>4. அந்த ஜெபத்தையும் வரி வசூலிப்பவரின் அணுகுமுறையையும் மாணவர்களை விவரிக்கும்படி கேளுங்கள்.<br>5. *ஜெபத்தில் இந்த இரண்டு மனிதரும் கொண்டிருந்த அணுகுமுறைகளில் வித்தியாசத்தைக் காண்க.*<br>6. *எந்த மனிதன் தேவனை அதிகம் மகிமைப்படுத்தினார், ஏன் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பரிசேயன் மற்றும் வரி வசூலிப்பவரின் உவமை.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. உள்ளவைகளில் கிறிஸ்துவர்களுக்கு மிக முக்கியமான புத்தகம் பைபிளாகும், ஆனால் அது உண்மை என்று நாம் எவ்வாறு உறுதியாக இருக்க முடியும்?<br>2. அனைத்து வேதவாக்கியங்களும் தேவனால் அருளப்பட்டிருக்கிறது என்று நாம் வாசித்த வேதப்பகுதி கூறுகிறது, தேவ ஏவுதலால் அது எழுதப்பட்டது என்பது இதன் பொருள். தேவன் பொய் சொல்லாதவர் ஆகையால் பைபிள் சத்தியம் என நாம் அறிகிறோம்.<br>3. பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட பல விஷயங்களில் சில உண்மையில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கழித்து நிறைவேறியிருக்கிறது.<br>உதாரணமாக பழைய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பு பற்றிய அனைத்து குறிப்புகளும்.<br>4. சுமார் 40 வேறுபட்ட மக்கள் பல நூற்றாண்டுகளாகப் பைபிளின் வெவ்வேறு பகுதிகளை எழுதினர், ஆனால் இப்புத்தகத்தில் ஒரு மையக்கருத்தும் ஒரு செய்தியும் இருக்கிறது, அது இப்புத்தகத்திற்கு ஒற்றுமையைக் கொண்டுவருகிறது.<br>5. பரிசுத்த ஆவியின் உதவியுடன் பைபிளை வாசிப்பதும் அதன் போதனையைப் பின்பற்றுவதும் மக்களுடைய வாழ்க்கையை மாற்றும்.<br>6. பைபிள் மிக முக்கியமானது என்பதில் அதிசயம்ஏதுமில்லை. நாம் ஏன் பைபிளை வாசிக்க வேண்டும் என்பதற்கான பல காரணங்களை யோசித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பொருத்தமான FBI – விளக்கப்படங்கள் இல்லை.(I)** |
| **மீள்பார்வை** | ஒரு தாளின் ஒரு பக்கத்தில் வரி வசூலிப்பவரின் குணங்களையும் மற்றொரு பக்கத்தில் பரிசேயரின் பண்புகளையும் காணும்படி எழுதுங்கள். | முக்கிய வசனத்தைச் சிந்தித்துப்பாருங்கள், பிறகு வானத்திலிருந்து வரும் ஒரு ஒளிக்கற்றையின் படத்தை வரையுங்கள். அதற்குக் கீழே உங்களுக்குத் தேவனுடைய வெளிச்சம் தேவைப்படும் தருணங்களை எழுதுங்கள் – உதாரணமாக, நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கக்கூடிய வேளை, நீங்கள் மனக்குழப்பமடைந்ததாக உணரும் வேளை. |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. “தாழ்மை” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன, நாம் எப்படி அதிகத் தாழ்மையுடன் இருக்க முடியும்? நாம் மனத்தாழ்மையை எவ்வாறு காட்டலாம் என்பதற்கு எடுத்துக்காட்டுங்களைத் தாருங்கள்.<br>2. “பெருமை” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? மேலும் நாம் எப்படி குறைவான பெருமையோடு இருக்க முடியும்? நாம் எப்படி பெருமையைக் காட்டலாம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக. | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. பைபிள் வாசிப்பதை எளிதாக்கும் நடைமுறை காரியங்கள் எவை?<br>2. நாம் தேவனிடம் ஜெபிப்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். பைபிளை அடிக்கடி வாசிக்கவும், அதை நன்றாகப் புரிந்துகொள்ளவும் மேலும் நமது வாழ்க்கையில் அதைக் கடைபிடிக்கவும் உதவ வேண்டும் என தேவனிடம் ஜெபிப்பதைப் பற்றி யோசியுங்கள். |

| | A8 – நிலை 3<br>பாடம் 3 – ஒரு கிறிஸ்தவராக இருப்பது<br>தலைப்பு – நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? | A8 – நிலை 4<br>ஆராய்ச்சி 3 – ஒரு கிறிஸ்தவராக இருப்பது<br>தலைப்பு – தேவனுக்காக வாழ்தல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *மத்தேயு 6: 5-15***<br>**முக்கிய வசனம் –*மத்தேயு 6: 8***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பிரச்சனை ஏற்படும்போது மாத்திரமல்ல, எப்பொழுதும் நாம் ஜெபம் செய்ய வேண்டும்,<br>2. நமது ஜெபம் அலங்காரமான வார்த்தைகள் உள்ளதாகவோ அல்லது நீண்டதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை.<br>3. நமது ஜெபம் இருக்கவேண்டிய விதத்தில் அதை வடிவமைக்க "கர்த்தருடைய ஜெபம்" உதவுகிறது. | **வேதப் பகுதி – *யோவான் 15: 1-17 & கலாத்தியர் 5: 22-23***<br>**முக்கிய வசனம் – *யோவான் 15: 5***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கிறிஸ்துவர் மென்மேலும் கிறிஸ்துவைப் போல ஆக வேண்டும்.<br>2. திராட்சச்செடியும் அதின் கிளைகளும் போல அவருடன் நெருக்கமாக இருக்க வேண்டும்என்பதுதான் இதன் இரகசியம்.<br>3. கிறிஸ்துவர்கள் அதிக பலனை கொடுப்பதற்கு தேவன் தொட்டு அதை ஒழுங்காக கத்தரித்து வேண்டியது அவசியம். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | 1. பாடங்கள் 1 & 2ம், மேலும் ஏற்கனவே ஜெபத்தைக் குறித்துக் கற்றுக்கொண்ட அனைத்தையும் மீள்பார்வை செய்யுங்கள்.அன்றாட முறையான ஜெபத்தைத் தவறாமல் ஜெபிப்பது சிலருக்குக் கடினமாகக் காணப்படுவது ஏன்?<br>2. சத்தமாக ஜெபம் செய்வது எவ்வாறு மனதை ஒருமுகப்படுத்துவதில் உதவுகிறது?<br>3. ஜெபங்களை எழுதும்போது அது எவ்வாறு சரியான வார்த்தைகளைத் தெரிவுசெய்வதில் உதவியாய் காணப்படுகிறது? | 1. தங்கள் வாழ்வில் ஆவிக்குரிய கனிகளைக் காண்பிக்கும் பலன்மிக்க கிறிஸ்தவர்களைப் பற்றி யோசித்துப் பாருங்கள், மேலும் அவர்களுடைய வாழ்க்கை எவ்வாறு பலன்மிக்கதாய் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள்.<br>2. தோட்டக்காரர் கிளைகளை வெட்டி சீராக்குவது போல், பிரயோஜனமல்லாத மற்றும் ஒருவேளை பாவமான விஷயங்களை அகற்ற தேவன் நம் வாழ்வில் எவ்வாறு செயல்பட முடியும் என்பதை விளக்குங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. மலைப்பிரசங்கத்தில் ஜெபத்தைப் பற்றி கர்த்தர் போதித்தார்.<br>2. ஜெபம் நமக்கும் தேவனுக்கும் இடையில் ஏன் தனிப்பட்டது என்பதை விளக்குங்கள்.<br>3. வெறுமனே ஜெபங்களை மீண்டும் மீண்டும் செய்வது உண்மையான ஜெபம் அல்ல என்பதை விளக்குங்கள்.<br>4. "நாம் கேட்பதற்கு முன்பே நமக்குத் தேவையானதை பிதா அறிந்தால்" ஜெபம் ஏன் அவசியம் என்று விவாதிக்கவும்.<br>5. துதி மற்றும் ஜெபத்தில் கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கர்த்தருடைய மாதிரி ஜெபத்தைப் பற்றி சிந்தியுங்கள்.<br>6. நாம் ஜெபிக்கும் சமயத்தில், தேவன் பதிலளிப்பார் என்று விசுவாசிப்பதின் முக்கியத்துவத்தையும், ஜெபத்தை செயலில் காண்பிப்பதையும் யோசித்துப்பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**3ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – பொருத்தமான FBI எடுத்துக்காட்டுகள் இல்லை.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பிதா தோட்டக்காரன், கர்த்தர் திராட்சச்செடி, கிறிஸ்தவர்கள் கிளைகளாய் இருக்கிறார்கள் என்ற சித்திரத்தை விவரியுங்கள்.<br>2. நம்முடைய வாழ்க்கையில் தேவன் பலனைப் பார்க்க விரும்புகிறார் என்பதை விளக்குங்கள். இதை ***கலாத்தியர் 5: 22-23*** சிறப்பாக விளக்குகிறது.<br>3. கிளைகள் நறுக்கி சீர்செய்வதற்கு முன்னும் பின்னும் பழ மரங்கள் எவ்வாறு இருக்கும் என்பதையும் பழ விளைச்சல் அதிகமாக உண்டாவதற்கு நறுக்கி சீர்படுத்துவது ஏன் முக்கியமானது என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.<br>4. பரிசுத்த ஆவியின் எந்த கிரியையும் இல்லாததால், கிறிஸ்துவின் மீது எந்த விசுவாசமும் இல்லாததால் மனித சுபாவத்தின் பழம் உண்டாவதை ***கலாத்தியர் 5: 19-20***லிருந்து வேறுபடுத்தி காண்க.<br>5. தமது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் கனிகளைக் காட்டிய கிறிஸ்துவைப் போலவே கிறிஸ்தவர்களாகிய நாமும் அதிகமாக மாற வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பொருத்தமான FBI எடுத்துக்காட்டுகள் இல்லை.(I)** |
| **மீள்பார்வை** | ***1 தீமோத்தேயு 2: 1***-ஐப் பற்றி சிந்தித்து, ஜெபத்தின் பல்வேறு வகைகளைப்பற்றிப் பேசுங்கள்.<br>நாம் தனிமையில் ஜெபிக்கக் கூடிய இடங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். மாணவர்கள் இடங்களைச் சொல்லும்போது அவற்றைப் பட்டியலிடுங்கள். | இந்த ஆய்வில் கற்றுக்கொண்ட முக்கியமான படிப்பினைகளைச் சுருக்கமாகக் கூறுங்கள்.<br>***யோவான் 15: 4-5***ல் சொல்கிறபடி, அவரில் நிலைத்திருப்பதே முக்கியம் என்பதை வலியுறுத்துங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>ஜெபம் ஒரு செயலற்ற ஒன்று அல்ல, ஆனால் ஒரு இயங்கக்கூடிய செயலாகும்.<br>இந்த நேரத்தில் அது உங்களுக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது என சிந்தியுங்கள்.<br>ஜெபத்தில் விசுவாசம் கொள்ள தேவனுடைய உதவியைக் கேட்கவும்.<br>கர்த்தருடைய மாதிரி ஜெபத்தில் காட்டப்பட்ட முறையைப் பயன்படுத்தி மாணவர்களை ஜெபம்செய்யச் சொல்லுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>***கலாத்தியர் 5: 22-23***ஐ ஜெபத்தோடு வாசிக்கும்படி மாணவர்களைக் கேளுங்கள். அவற்றில் எந்த குணம் / கனியில் வளர வேண்டி இருக்கிறதோ அவற்றில் உதவிசெய்ய தேவனிடம் ஜெபிக்கச் சொல்லுங்கள். |

| | A8 – நிலை 3<br>பாடம் 4 – ஒரு கிறிஸ்தவராக இருப்பது<br>தலைப்பு – தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறாரா? | A8 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 – ஒரு கிறிஸ்துவராக இருப்பது<br>தலைப்பு – தேவனுக்குக் கொடுப்பது |
|---|---|---|
| | **வேதப் பகுதி –** *1 சாமுவேல் 1: 1-20*<br>**முக்கிய வசனம் –***1 சாமுவேல் 1: 20*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நமது ஜெபங்களுக்கு எப்போதுமே பதில் நாம் விரும்பும் விதத்தில் அல்லது விரைவாக கிடைப்பதில்லை.<br>2. தேவனுடைய பதில்களும் திட்டங்களும் எப்போதும் நம்முடையவைகளைவிடசிறப்பாக இருக்கின்றன. | **வேதப் பகுதி –** *மாற்கு 12: 41-44 & மத்தேயு 6: 1-4*<br>**முக்கிய வசனம் –** *2 கொரிந்தியர் 9: 7*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் தேவனுக்கு மிகுந்த உற்சாகத்தோடு கொடுக்க வேண்டும் என்பதுநமது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாகும்.<br>2. தேவனுக்குக் கொடுப்பது என்பது பணம் மட்டுமே அல்ல. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | அன்னாளையும் அவளுடைய சூழ்நிலையையும் அறிமுகப்படுத்துங்கள்.<br>வார்த்தைகளைப் பயன்படுத்தி அன்னாளுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு சுவர் காட்சியை உருவாக்கவும்:<br>**ஜெபத்திற்கு முன் + ஜெபத்திற்குப் பிறகு.** | சிறு குழுக்களாக, வட்டமாக உட்கார்ந்து, தேவன் நமக்குக் கொடுக்கிற காரியங்களைப் பட்டியலிடுக, பிறகு நாம் கர்த்தருக்குக் கொடுக்கக்கூடியவை என்ன என்பதையும் பட்டியலிடுக. |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. அன்னாளின் சூழ்நிலையையும் அவளுடைய குடும்பத்தையும் பற்றிச் சுருக்கமாக விளக்குங்கள்.<br>ஆராதிப்பதற்காகவும் பலிசெலுத்துவதற்காகவும் தேவனுடைய வீட்டிற்கு அவள் ஒவ்வொரு வருடமும் சென்றுவந்ததை விளக்கவும்.<br>2. குழந்தைகள் இல்லாதபோது மற்றும் பெனினாள் கோபமூட்டியபோது அன்னாள் எப்படி உணர்ந்தாள் என்பதை விளக்குங்கள்.<br>3. அன்னாளின் ஜெபத்தையும் அவள் செய்த பொருத்தனையையும் விளக்குங்கள்.<br>4. அன்னாளின் ஜெபத்தைக் குறித்து ஏலி சொன்ன வார்த்தைகளை விவரியுங்கள்.<br>5. அன்னாளின் ஜெபத்திற்கு தேவன் எப்படி பதிலளித்தார் என்பதை விளக்குங்கள்.<br>6. அவள் ஜெபித்து பாரத்தை கர்த்தரிடத்தில் ஒப்படைத்த பிறகு எவ்வளவு வித்தியாசமாக உணர்ந்திருப்பாள் என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI –** சாமுவேல் பிறக்கிறார்.**(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஜனங்கள் காணிக்கைப் பணம் கொடுப்பதை இயேசு பார்த்தபோது, தேவாலயத்தில் நிலவிய சூழ்நிலையை விளக்குங்கள்.<br>2. ஏழை விதவையின் காணிக்கை எல்லோருடைய காணிக்கையைவிட ஏன் மிகவும் வித்தியாசமாக இருந்தது என்பதை விளக்குங்கள்.<br>3. அந்தப் பெண்மணியின் சிறிய காணிக்கையில் இயேசு ஏன் இவ்வளவு மகிழ்ச்சியடைந்தார்?<br>4. நம் நேரத்தையும், திறமையையும், பொக்கிஷங்களையும் கர்த்தருக்குக் கொடுப்பதைப் பற்றி இந்தச் சம்பவம் நமக்கு என்னக் கற்பிக்கிறது?<br>5. இரகசியமாகக் கொடுக்க வேண்டும் என தேவன் நமக்கு ஏன் அறிவுறுத்துகிறார்?<br>6. இரகசியமாக கொடுப்போருக்கு தேவன் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 4ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – எல்லாவற்றையும் கொடுத்த விதவை. (I)** |
| **மீள்பார்வை** | 1. மாணவர்கள் எப்போதாவது ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி உண்மையிலேயே சோகமாக இருந்தார்களா என அவர்களிடம் கேளுங்கள்.<br>2. அந்த நேரத்தில் உதவ அவர்கள் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்தியுங்கள்.<br>3. கர்த்தரிடத்தில் தங்கள் கவலைகளை விட்டுவிட்டப் பின்னர் யாராவது நன்றாக உணர்ந்திருக்கிறார்களா என்று கேட்டறியுங்கள். | 1. கர்த்தருக்கு நாம் எந்த வழிகளில் கொடுக்கலாம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.<br>2. இன்றைய ஆய்வின் விளைவாக, நடைமுறையில் கடைப்பிடிக்கக்கூடிய ஒன்றைத் தேர்வு செய்யுங்கள்.<br>3. மாணவர்கள் கொடுக்கும் போது, சரியான நோக்கத்துடன் இருப்பதை உறுதி செய்யும்படி அவர்களுக்கு சவால் விடுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>தேவன் தங்கள் கவலைகளை சுமப்பதினால் அவர்கள் விடுதலையை உணர முடியும் என்று தெரிந்துகொள்வதினால் பயனடையக்கூடிய ஒரு நபரை யோசித்துப் பாருங்கள். அவர்களை விரைவில் சந்தித்து இந்தச் செய்தியைக் கூறமுடியுமா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" *(அப்போஸ்தலர் 20: 35)* என்று இயேசு சொன்ன வசனத்திற்கு இணையான பைபிள் வசனங்களை தேடிப்பாருங்கள். இந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ள தேவனுடைய உதவியை நாடுங்கள். |

| | A9 – நிலை 3<br>பாடம் 1 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – துன்புறுத்துபவர் | A9 – நிலை 4<br>ஆராய்ச்சி 1 – அப்போஸ்தலனாகிய பவுல்<br>தலைப்பு – அவரது மனமாற்றம் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 9: 1-19***<br>**முக்கிய வசனம் –*2 கொரிந்தியர் 5: 17***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கிறிஸ்துவை சந்தித்தபின் பவுல் மாற்றப்பட்டார்.<br>2. இன்றும் தேவன் வாழ்க்கையை மாற்றுகிறார். | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 9: 1-30***<br>**முக்கிய வசனம் – *2 கொரிந்தியர் 5: 17***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் மட்டுமே வாழ்க்கையை மாற்ற முடியும்.<br>2. ஒரு கிறிஸ்தவராக இருப்பது கடினமாக இருக்கலாம், ஆனால் குறிப்பாக கடினமான காலங்களில் தேவன் கிறிஸ்தவர்களோடு இருக்கிறார். |
| அறிமுகப்படுத்துங்கள் | புதிய ஏற்பாட்டின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒருவராக சவுலை அறிமுகப்படுத்துங்கள்.<br>ஸ்தேவானுடைய மரணத்தில் அவருக்கிருந்த தொடர்பை விளக்குங்கள். ***(அப்போஸ்தலர் 6: 58)***<br>மனமாற்றம் என்ற கருத்தை அறிமுகப்படுத்த ஒரு கூட்டுப்புழு வண்ணத்துப்பூச்சியாக உருமாற்றம் அடைவதை உதாரணமாகக் கூறுங்கள். | புதிய ஏற்பாட்டின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒருவராக சவுலை அறிமுகப்படுத்துங்கள்.<br>ஸ்தேவானுடைய மரணத்தில் அவருக்கிருந்த தொடர்பை விளக்குங்கள். ***(அப்போஸ்தலர் 6: 58)***<br>மனமாற்றம் என்ற கருத்தை அறிமுகப்படுத்த ஒரு கூட்டுப்புழு வண்ணத்துப்பூச்சியாக உருமாற்றம் அடைவதை உதாரணமாகக் கூறுங்கள். |
| முடியுங்கள் | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பின்னர் இந்தக் கதையில் பவுலை சவுல் என குறிப்பிடுவதைப் பற்றி விளக்குங்கள்.<br>2. அவர் ஏன் தமஸ்குவுக்குப் பயணம் செய்தார் என்பதைப் பற்றிய விவரங்களைக் கொடுங்கள்.<br>3. என்ன நடந்தது என்பதை கவனமாக விளக்குங்கள், சவுல் கர்த்தரைச் சந்தித்தபோது என்னக் கூறப்பட்டது? பிற்பாடு பவுல் கொடுத்த விவரங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.***(அப்போஸ்தலர் 22: 1-13, 26: 9-18)***<br>4. அவர் தமஸ்குவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் என்ன நடந்தது, அவருக்கு இருந்த சவால் என்ன என்பதை விளக்கவும்.<br>5. 'மனமாற்றம்' என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பற்றி சிந்தியுங்கள். கிறிஸ்துவில் ஒருவரை புதிதாக உருவாக்குவதற்கு தேவனுடைய கிருபையின் ஒரு வேலையே மனமாற்றமாகும். மறுபடியும் பிறத்தல் என்பதோடு இதனை சம்பந்தப்படுத்திப் பாருங்கள். ***(யோவான் 3: 3)***.<br>6. கிறிஸ்துவை சந்தித்தப் பிறகு பவுல் எப்படி மாற்றப்பட்டார் என்பதை விவரியுங்கள்.<br>7. கிறிஸ்தவ விசுவாசத்தில் இந்தச் செய்தி எவ்வளவு முக்கியமானது என்பதை வலியுறுத்துங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – சவுலின் மனமாற்றம் (பவுல்). (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பின்னர் இந்தக் கதையில் பவுலை சவுல் என குறிப்பிடுவதைப் பற்றி விளக்குங்கள்.<br>2. அவர் ஏன் தமஸ்குவுக்குப் பயணம் செய்தார் என்பதைப் பற்றிய விவரங்களைக் கொடுங்கள்.<br>3. என்ன நடந்தது என்பதைக் கவனமாக விளக்குங்கள், சவுல் கர்த்தரைச் சந்தித்தபோது என்னக் கூறப்பட்டது? பிற்பாடு பவுல் கொடுத்த விவரங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம். ***(அப்போஸ்தலர் 22: 1-13, 26: 9-18)***<br>4. அவர் தமஸ்குவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் என்ன நடந்தது, அவருக்கு இருந்த சவால் என்ன என்பதை விளக்கவும்.<br>5. ஒரு கிறிஸ்தவராக இருப்பது ஒருபோதும் எளிதானது அல்ல. கர்த்தரைப் பின்தொடர்ந்தபோது சவுல் தனது ஆரம்ப நாட்களில் எதிர்கொண்ட சில பிரச்சினைகளை விவரியுங்கள்.<br>6. கிறிஸ்துவில் ஒருவரை புதிதாக உருவாக்குவதற்கு தேவனுடைய கிருபையின் ஒரு வேலையே மனமாற்றமாகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ***யோவான் 3: 3***ல் மறுபடியும் பிறத்தல் என்பதோடு இதனை சம்பந்தப்படுத்திப் பாருங்கள்.<br>7. சவுல் 'பக்தியுள்ளவராக' ஆக்கப்படவில்லை என்பதை கவனியுங்கள்; அவர் ஏற்கனவே மனமாற்றத்திற்கு முன்பே பக்தியுள்ளவராக இருந்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – சவுலின் மனமாற்றம் (பவுல்). (I)** |
| மீள்பார்வை | 'சவுல் – முன் மற்றும் பின்' என்ற கருப்பொருளில் ஒரு சுவர் காட்சியை உருவாக்கவும். | கற்கும் நோக்கங்களில் ஒன்றைத் தேர்வுசெய்து, உங்கள் வாழ்க்கையை அது எவ்வாறு பாதிக்கலாம் என்பதை வெளிப்படுத்தும் ஒரு ஜெபத்தை எழுதுங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. தங்கள் சொந்த நிலைமையைப் பற்றி மாணவர்களுக்கு சவால் விடுங்கள்.<br>2. அனனியாவின் உதாரணத்திலிருந்து நாம் கீழ்ப்படிதலைப் பற்றி என்ன கற்றுக்கொள்ளலாம்?கீழ்ப்படிதலைப் பற்றி கற்றுக்கொள்ளும் காரியங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு 'செய்ய வேண்டியவை' பட்டியலைத் தயாரிக்கவும்.<br>3. ஒரு புதிய கிறிஸ்தவருக்கு கிறிஸ்துவர்கள் ஊக்கமளிப்பவர்களாக இருக்க முடியும் என்பதற்கான வழிகளைச் சிந்தியுங்கள். இவைகளைப் பட்டியலிட்டு ஒரு செயல் திட்டத்தை உருவாக்கவும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. தங்கள் சொந்த நிலைமையைப் பற்றி மாணவர்களுக்கு சவால் விடுங்கள்.<br>2. இன்று உபத்திரவத்தை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள்.<br>3. ***1 தீமோத்தேயு 1: 12-16***-ஐ வாசியுங்கள். ***வசனம் 15***ஐ மனந்திரும்பாத நண்பர்களோடு பகிர்ந்துகொள்வதைப் பற்றி யோசியுங்கள். |

| | A9 – நிலை 3<br>பாடம் 2 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – பிரச்சனைகள் | A9 – நிலை 4<br>ஆராய்ச்சி 2 – அப்போஸ்தலனாகிய பவுல்<br>தலைப்பு – அவரது பயணங்கள் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 9: 19-30***<br>**முக்கிய வசனம் –*ரோமர் 1: 16***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. எல்லாரும் நற்செய்தியை பாராட்டுவதில்லை என்பதால், கிறிஸ்தவராக இருப்பதுசில சமயங்களில் கடினமாக இருக்கலாம்.<br>2. புதிய கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க வேண்டியது முக்கியமாகும். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 11: 19-26; 13: 1-12***<br>**முக்கிய வசனம் – *அப்போஸ்தலர் 13: 12***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. மனந்திரும்புதலே கிறிஸ்தவில் இருக்கும் புதிய வாழ்வின் ஆரம்பமாகும்.<br>2. நாம் புதிய கிறிஸ்தவர்களுக்கு கற்றுத்தர வேண்டியது முக்கியமானது, ஏனெனில் அப்பொழுதுதான் அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிய புரிந்துகொள்ளுதலில் வளர்வார்கள். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஊக்குவிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஊக்கமளிக்கப்பட்டதற்கு எடுத்துக்காட்டுகளைச் சொல்லச் சொல்லுங்கள், மேலும் இது ஏன் முக்கியமானது என்பதை விளக்கச் சொல்லுங்கள். | உதாரணங்களைப் பயன்படுத்தி, நமது உடலின் வளர்ச்சிக்கு உணவு எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள். கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்துங்கள்.<br>பைபிள்கள் இருந்தால் யாராவது ஒருவர் ***1பேதுரு 2: 2*** மற்றும் ***2 பேதுரு 3: 18***ஐ வாசிக்கச் சொல்லுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. சவுல் தமஸ்குவில் பிரசங்கிக்கத் தொடங்கியபோது என்ன நடந்தது என்பதை விவரியுங்கள், மேலும் அவருடைய செய்தி என்னவென்பதையும் விளக்குங்கள்.<br>2. யூதர்கள் ஏன் அவரை வெறுத்தார்கள், அவர் எப்படி தப்பிக்க முடிந்தது என்பதை விளக்குங்கள்.<br>3. சவுலின் பிரச்சினைகளின் தன்மைகளைப் பற்றி பேசுங்கள், மக்கள் ஏன் சுவிசேஷத்தை எதிர்த்தார்கள்? சவுல் ஏன் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படவில்லை? (முக்கிய வசனத்தைக் காண்க)<br>4. அவர் எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது அவர் சந்தித்த பிரச்சினைகளை விவரியுங்கள்.<br>5. சவுலுக்கு பர்னபா எவ்வளவு முக்கியமானவர் என்பதைப் பற்றிப் பேசுங்கள், மேலும் கிறிஸ்தவ வாழ்க்கையில் உற்சாகப்படுத்துவதின் முக்கியத்துவத்தைப் பற்றியும் பேசுங்கள். ***1 சாமுவேல் 30: 6***ஐ வாசியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – சவுலின் மனமாற்றம் (பவுல்). (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஸ்தேவானின் மரணத்திற்குப் பிறகு கிறிஸ்தவர்கள் பரவலாக பல இடங்களுக்கும் சிதறிப்போனார்கள், சிலர் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.<br>2. அவர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பரப்பினார்கள், அநேகர் விசுவாசித்து, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.<br>3. புதிய கிறிஸ்தவர்களுக்கு உதவ பர்னபாஸ் எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டார்.இது ஒரு மாபெரும் வேலை என்று அவர் உணர்ந்து, சவுலை அந்தியோகியாவுக்குக் கொண்டு வந்தார், ஒரு வருடமாக அவர்கள் சபையில் பெருந்திரளான மக்களுக்குப் போதிக்கிறார்கள்.<br>4. அக்காலத்திலே பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் ஒரு புதிய ஊழியத்திற்கு அனுப்பிவைக்கும்படி சபைக்குக் கூறினார்.<br>5. சைப்ரஸில் அவர்கள் எலிமாஸ் என்றழைக்கப்பட்ட ஒரு மனிதனின் எதிர்ப்பைச் சந்தித்தார்கள்; அவன் முக்கியமானவர்களில் ஒருவரான செர்கியஸ்பவுலை ஒரு கிறிஸ்தவனாக மாறவிடாமல் தடுக்க முயன்ற மாயவித்தைக்காரன் ஆவான்.<br>சவுல் கடிந்துகொண்டார், உடனே எலிமாஸ் குருடனானான், செர்கியுஸ்பவுல் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தார்.<br>6. சுவிசேஷத்தில் வசனத்தைப் பிரசங்கிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். ***அப்போஸ்தலர் (11: 19-20).***<br>7. கிறிஸ்தவர்களாக வளர்ந்து வருவதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துங்கள். *(1 பேதுரு 2: 2).*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பவுலும் பர்னாபாவும் சைப்ரஸுக்கு வருகைபுரிதல். (I)** |
| **மீள்பார்வை** | சவுலை உதாரணமாகப் பயன்படுத்தி, கிறிஸ்துவ வாழ்க்கையின் சில கஷ்டங்களை கலந்தாலோசியுங்கள். | பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தி பாடத்தை மீளாய்வு செய்யவும்:<br>1. பவுல் மற்றும் பர்னபாவின் ஊழியம் வெற்றிபெற்றதா? உங்கள் பதிலை விளக்குங்கள்.<br>2. எலிமாஸைப் பவுல் எதிர்கொள்வதிலிருந்து பொல்லாத ஆவிகள்மீது தேவனின் வல்லமையைப் பற்றி நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. கிறிஸ்தவர்களாகும்போது மக்கள் சில நேரங்களில் வாழ்க்கை 'பிரச்சனை இல்லாததாய்' இருக்க வேண்டும் எனஎதிர்பார்க்கிறார்கள். இந்த மனப்பான்மையோடு இருப்போருக்கு பவுல் என்ன ஆலோசனை கொடுப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ***2 கொரிந்தியர் 11: 23-33***ஐ யோசித்துப்பாருங்கள்.<br>2. சிரமங்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஊக்கமளிக்கும் ஜெபத்தை எழுதுங்கள். அந்த ஜெபம் அடங்கிய புக்மார்க்கை வடிவமைத்து, உங்களுக்குத் தெரிந்த, கஷ்டங்களை அனுபவிக்கும் ஒரு கிறிஸ்தவருக்கு அதைக் கொடுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. மாணவர்களை உங்களுக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ போதகரிடம் பேசும்படி சொல்லுங்கள். அவர்களுடைய ஊழியத்தில் கண்ட மனந்திரும்பினவர்களின் ஆச்சரியமான கதைகளில் சிலவற்றைப் பற்றிக் கேளுங்கள். இது எப்படி உங்களுக்கு சவால் விடுகிறது?<br>2. உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்தவத் தலைவர்களுடன் கலந்துபேசி, பைபிளை எவ்வாறு நன்கு புரிந்துகொள்வது, மேலும் உங்கள் சொந்த பைபிள் வாசிப்பு திட்டத்தை எவ்வாறு மேம்படுத்துவது எனக் கேளுங்கள். |

| | A9 – நிலை 3<br>**பாடம் 3 – பவுலின் வீரச்செயல்கள்**<br>**தலைப்பு – பிரசங்கிப்பவர்** | A9 – நிலை 4<br>**ஆராய்ச்சி 3 – அப்போஸ்தலன் பவுல்**<br>**தலைப்பு – அவரது பிரசங்கம்** |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 13: 1-12***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 13: 12***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டார், அதனால் சுவிசேஷம் புதிய இடங்களில் அறிவிக்கப்பட்டுக்கொண்டு இருந்தது.<br>2. சுவிசேஷத்திற்கு சாத்தானுடைய எதிர்ப்பு இருக்கலாம். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 13: 13-52***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 13: 49***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கிறிஸ்துவைப் பற்றிய செய்தி பழைய ஏற்பட்டில் வேரூன்றியுள்ளது, கிறிஸ்துவின்மரணமும் உயிர்த்தெழுதலும் தேவனுடையத் திட்டத்தின்படி இருந்தது.<br>2. கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே பாவமன்னிப்பு. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலுள்ள மோதலைக் குறித்து மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.<br>இதை நிரூபிக்கும் வகையில் ஏதேன் தோட்டத்திற்கு திரும்பிச் செல்லுங்கள், வீழ்ச்சியின் கதையைப் பற்றி விவாதிக்கவும். சாத்தான் இன்னமும் பல்வேறு விதங்களில் செயலில் ஈடுபடுகிறான், கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு எதிராக இருக்கிறான் என்பதை சுட்டிக்காட்டுக. | மன்னிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களைச் சிந்திக்கச் சொல்லுங்கள்.யாராவது ஒருவரை மன்னிக்கும் அன்றாட சூழ்நிலைகள் பற்றி யோசியுங்கள்.தேவனின் மன்னிப்பு நமக்கு ஏன் தேவை என்பதை சிந்தியுங்கள். பாவங்களை மன்னிப்பதற்கான கிறிஸ்தவ செய்தியில் கிறிஸ்து எவ்வாறு மையமாக விளங்குகிறார் என்பதைப் பற்றி விவாதிக்கவும். பாவமன்னிப்பைப் பற்றிய சில தவறான கருத்துக்களை கண்டறியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஸ்தேவானின் மரணத்திற்குப் பிறகு கிறிஸ்தவர்கள் பரவலாக பல இடங்களுக்கும் சிதறிப்போனார்கள், சிலர் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.<br>2. அவர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பினார்கள், அநேகர் விசுவாசித்து, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.<br>3. புதிய கிறிஸ்தவர்களுக்கு உதவ பர்னபாஸ் எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டார்.இது ஒரு மாபெரும் வேலை என்று அவர் உணர்ந்து, சவுலை அந்தியோகியாவுக்குக் கொண்டுவந்தார், ஒரு வருடமாக அவர்கள் சபையில் பெருந்திரளான மக்களுக்குப் போதிக்கிறார்கள்.<br>4. அக்காலத்திலே பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் ஒரு புதிய ஊழியத்திற்கு அனுப்பிவைக்கும்படி சபைக்குக் கூறினார்.<br>5. சைப்ரஸில் அவர்கள் எலிமாஸ் என்றழைக்கப்பட்ட ஒரு மனிதனின் எதிர்ப்பைச் சந்தித்தார்கள்; அவன் முக்கியமானவர்களில் ஒருவரான செர்கியஸ்பவுலை ஒரு கிறிஸ்தவனாக மாறாவிடாமல் தடுக்க முயன்ற மாயவித்தைக்காரன் ஆவான்.<br>6. சவுல் கடிந்துகொண்டார், உடனே எலிமாஸ் குருடனானான், செர்கியுஸ்பவுல் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தார்.<br>7. *உண்மையில் பிசாசு இருப்பதையும், பிசாசுப்பிடித்தலின் தன்மையையும் விவாதிக்கவும்.*<br>8. *அன்றும் இன்றும் சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து கலந்துபேசுங்கள்.*<br>9. *தேவனின் நியாயத்தீர்ப்பு எலிமாஸ்மீது ஏன் இறங்கியது?*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**3ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பவுலும் பர்னாபாவும் சைப்ரஸுக்கு வருகைபுரிதல்.(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இப்போது மற்றொரு அந்தியோகியாவுக்கு வருகிறார். (பிசீதியா)<br>2. அவருடைய முதல் செய்தியில், யூத சரித்திரத்தை முழுமையாக விவரித்து, இயேசுவின் வருகை, அவருடைய மரணம், உயிர்த்தெழுதலில் அச்செய்தியை உச்சத்திற்கு கொண்டுசென்றார். “இயேசுவின் மூலம் பாவ மன்னிப்பு உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது” என்று சொல்லி முடித்தார். ***(வசனம் 38)***<br>3. ஜெப ஆலயத்தில் முதல் செய்திக்குப் பிறகு அவர் அடுத்த ஓய்வுநாளில் திரும்ப வரும்படி அழைக்கப்பட்டார்.<br>4. அடுத்த ஓய்வுநாளில் பவுல் பிரசங்கிப்பதைக் கேட்க கிட்டத்தட்ட பட்டணத்திலிருந்த அனைவரும் கூடிவந்தனர், ஆனால் யூதத் தலைவர்கள் பொறாமைகொண்டனர்.<br>5. தேவனுடைய வார்த்தையை அவர்கள் புறக்கணித்துவிட்டதால், ***ஏசாயா 49: 6***-ன்படி தான் புறஜாதிகளிடத்திற்குப் போவதாக பவுல் கூறினார்.<br>6. *யூதத் தலைவர்கள் ஏன் கிறிஸ்து மரிக்கவேண்டும் என்று விரும்பினார்கள் என்பதை விளக்குங்கள்.*<br>7. *இயேசு மரிக்க வேண்டியது ஏன் அவசியமாயிருந்தது, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் தேவனுடையத் திட்டத்தின் ஒரு பாகமாக இருந்தது என்பதை கவனியுங்கள்.*<br>8. *கிறிஸ்து இரட்சகராக இருப்பதின் தனித்துவத்தைச் சிந்தித்துப்பாருங்கள்.* ***(38-39 வசனத்தைப்பார்க்கவும்)***<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 3ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – அந்தியோக்கியா மற்றும் இக்கோனியத்தில் பவுலும் பர்னபாவும் (I)** |
| **மீள்பார்வை** | படித்த பாடத்திலிருந்து சாத்தானை தேவன் எவ்வாறு தோற்கடிக்கிறார் என்பதை விளக்குவதற்கு மாணவர்களை உதாரணம் சொல்லச் சொல்லுங்கள், இதன்மூலம் ஆய்வுகளை மீளாய்வு செய்யவும். | இன்றைய ஆய்வை மாணவர்கள் மதிப்பாய்வு செய்வதற்கு வழிகாட்டியாக வினாடிவினா கேளுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. செர்கியுபவுல் மற்றும் எலிமாஸ் – இவ்விருவரும் நற்செய்தியைக்கு காண்பிக்கும் பதிலை வேறுபடுத்திக் காண்க. நற்செய்திக்கு செவிசாய்க்க மாணவர்களுக்கு சவால் விடுங்கள்.<br>2. பல திரைப்படங்களில் இன்றும் பொதுவாக மாயவித்தைகள் என்ற கருத்து உள்ளது – எ.கா. ஹாரி பாட்டர். கிறிஸ்தவர்கள்இந்தத் திரைப்படங்களைப் பார்க்க வேண்டுமா? வகுப்பறையில் இதைப்பற்றி ஒரு விவாதம் வையுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. கிறிஸ்து இரட்சகராக விளங்கும் தனிச்சிறப்பு எவ்வாறு நமது கலாச்சாரத்திற்கு சவாலாக உள்ளது?<br>2. ***எபேசியர் 4: 32***ஐ வாசித்து, மன்னிப்பு பற்றிய பவுலின் வார்த்தைகள் அவர்களை எப்படி பாதிக்கிறது என மாணவர்களுக்கு அறைகூவல் விடுங்கள்! |

| | A9 – நிலை 3<br>பாடம் 4 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – 'ஒரு பிரிக்கப்பட்ட நகரம்' | A9 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 – அப்போஸ்தலன் பவுல்<br>தலைப்பு – அவரது பிரச்சனைகள் |
|---|---|---|
| | **வேதப் பகுதி –** ***அப்போஸ்தலர் 13: 13-16; 42-52***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 13: 49***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டியது முக்கியம்.<br>2. கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அனைவருக்கும் உள்ளது, அதைப் பெற்றுக்கொண்டவர்களுக்குப் அது சந்தோஷத்தைக் கொண்டுவந்தது. | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 14: 1-28***<br>**முக்கிய வசனம் –*மாற்கு 16: 20***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கிறிஸ்துவின் செய்தி மக்களைப் பிரிக்கிறது, கிறிஸ்தவ செய்திக்கு சில எதிர்வினைகள் தீவிரமாக உள்ளது.<br>2. பவுல் காட்டியுள்ளபடி கிறிஸ்துவுக்கு விசுவாசமாய் இருப்பது மிகவும் முக்கியம். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பைபிள் மிக முக்கியமானது என ஏன் நினைக்கிறார்கள் என மாணவர்களைக் கேளுங்கள். (இந்தப் பாடங்களைப் படிக்கும் வேதப்பகுதியில் கர்த்தருடைய வார்த்தை என்பது பல முறை குறிப்பிடப்பட்டிருப்பதை கவனிக்கவும்) பைபிள் கிறிஸ்துவின் செய்தியை மையமாகக் கொண்டுள்ளது, அது எல்லா மக்களுக்கும் தேவை என்ற கருத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். கிறிஸ்தவர்கள் பல்வேறு கலாச்சாரப் பின்னணியிலிருந்து வந்திருப்பதை நினைப்பூட்டுங்கள். | 'உண்மையுள்ளவர்களாய் இருத்தல்' என்ற வார்த்தையை வரையறுக்கும்படி மாணவர்களைக் கேளுங்கள். அன்றாட வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கான உதாரணங்களையும், உண்மையுள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்தும் மக்களைப் பற்றியும் சிந்திக்கும்படி மாணவர்களைக் கேளுங்கள்.<br>உண்மையுள்ளவர்களாயிருப்பது ஏன் மிக முக்கியமானது என்பதை யோசியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இப்போது மற்றொரு அந்தியோகியாவுக்கு வருகிறார் (பிசீதியா). ஜெப ஆலயத்தில் முதல் செய்திக்குப் பிறகு அவர் அடுத்த ஓய்வுநாளில் திரும்ப வரும்படி அழைக்கப்பட்டார்.<br>2. அடுத்த ஓய்வுநாளில் பவுல் பிரசங்கிப்பதைக் கேட்க கிட்டத்தட்ட பட்டணத்திலிருந்த அனைவரும் கூடிவந்தனர், ஆனால் யூதத் தலைவர்கள் பொறாமைகொண்டனர்.<br>3. தேவனுடைய வார்த்தையை அவர்கள் புறக்கணித்துவிட்டதால், ***ஏசாயா 49: 6***ன்படி தான் புறஜாதிகளிடத்திற்குப் போவதாக பவுல் கூறினார்.<br>4. பவுலின் பிரசங்கத்தைக் கேட்கவந்தவர்களை வலியுறுத்துங்கள். ***(வசனங்கள் 16, 42,43 மற்றும் 48)***<br>5. நற்செய்தி முதலில் ஏன் யூதர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டது என்பதை விளக்குங்கள்.<br>6. தேவனுடைய வார்த்தை எப்படி பரவியது என்பதை விவரிக்கவும்.***(வசனம் 49)***<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – அந்தியோக்கியா மற்றும் இக்கோனியத்தில் பவுலும் பர்னபாவும்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுலும் பர்னபாவும் இக்கோனியாவுக்கு வந்தபோது அநேக யூதர்களும் புறஜாதியாரும் விசுவாசித்தார்கள், ஆனால் சில யூதர்கள் எதிர்ப்பைத் தூண்டிவிட்டார்கள்.<br>2. சுவிசேஷத்தின் காரணமாக அந்த நகரத்தார் இரண்டாகப் பிரிந்தனர், சிலர் பவுலையும் பர்னபாவையும் கல்லெறிந்துக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார்கள், ஆகையால் இவர்கள் லீஸ்திராவுக்குத் தப்பி ஓடிப்போக வேண்டியதாயிற்று.<br>3. இங்கே தேவன் ஒரு முடவனைக் குணமாக்கப் பவுலைப் பயன்படுத்தினார், இதன் விளைவாக அந்த நகர மக்கள் அவர்களைத் தெய்வங்கள் என நினைத்து, அவர்களுக்கு பலிகளைச் செலுத்த விரும்பினார்கள்.<br>4. மக்களைப் பயனற்ற விக்கிரகங்களை விடச்செய்து ஜீவனுள்ள தேவனிடத்திற்குக் கொண்டுவர தாங்கள் முயற்சித்ததாக பவுலும் பர்னபாவும் கூறினர்.தேவன் நமக்குக் கொடுக்கிற அனைத்தையும் அவர்கள் விளக்கினார்கள். ***(வசனம் 17)***<br>5. அந்தியோகியாவிலும் இக்கோனியாலிலிருந்தும் யூதர்கள் வந்து, பவுலைக் கல்லெறிய ஜனங்களைத் தூண்டிவிட்டார்கள்; அவன் மரித்துப்போனான் என்று எண்ணி, பட்டணத்திலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். அதிர்ஷ்டவசமாக பவுல் தப்பிப்பிழைத்தார், அடுத்த நாள் அவர்கள் தெர்பைக்குச் சென்றார்கள்.இங்கு அதிக எண்ணிக்கையில் மக்கள் சீடர்கள் ஆனார்கள்.<br>6. அவர்கள் தங்கள் உயிரைப் பணயம்வைத்து லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய இடங்களுக்குச் சென்று கிறிஸ்தவர்களை தைரியப்படுத்தினார்கள்.<br>7. *தேவன் யார் என்பதை வலியுறுத்துங்கள்.* ***(வசனங்கள் 15-17)***<br>8. *பவுலும் பர்னபாவும் போல விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொள்ளுங்கள் –* ***வசனம் 22*** *ஐகவனியுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். ஆராய்ச்சி 4ஐமுடியுங்கள். காண்பியுங்கள்: FBI – அந்தியோக்கியா மற்றும் இக்கோனியத்தில் பவுலும் பர்னபாவும்(I)** |
| **மீள்பார்வை** | சாத்தானை தேவன் எவ்வாறு தோற்கடிக்கிறார் என்பதை விளக்குவதற்கு படித்த பாடத்திலிருந்து மாணவர்களை உதாரணம் சொல்லச் சொல்லுங்கள், இதன்மூலம் ஆய்வுகளை மீளாய்வு செய்யவும். | இன்றைய ஆய்வை மாணவர்கள் மதிப்பாய்வு செய்வதற்கு வழிகாட்டியாக வினாடிவினா கேளுங்கள்.<br>1. ***வசனம் 3***ல் "அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள்" – இவற்றின் நோக்கம் என்ன?<br>2. பவுலும் பர்னபாவும் தேவனிடத்தில் உண்மையுடன் நடந்துகொள்வதை இந்த வேதப்பகுதியில் பக்திவைராக்கியமாய் காண்பிக்கிறார்களா? நம் வாழ்க்கையை தமது ஊழியத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறாரா? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. ***வசனங்கள் 42 மற்றும் 48*** ஆகிய வசனங்களில் கிறிஸ்துவின் செய்திக்கு புறஜாதியாரின் பதிலைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் செய்திக்கு பதிலளிப்பதைப்பற்றி இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?<br>2. கிறிஸ்துவின் செய்தியை மற்ற கலாச்சாரங்களுக்கு கொண்டுசெல்லும் ஒரு மிஷனரி சமுதாயத்தின் முயற்சியைப் படிக்கவும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. குழுக்களில் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையில் 'நம்பிக்கைக்குரிய' என்ற வார்த்தைக்கு (acrostic) ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு விளக்கத்தை எழுதவும்.<br>2. கிறிஸ்துவின் செய்தி எப்படி இன்றைய நமது சொந்த சமுதாயத்தில் விக்கிரகாரதனைக்கு சவாலாய் அமைகிறது என்பதை கருத்தில்கொண்டு ஒரு சுவர்க் காட்சியை உருவாக்கவும். |

| | A10 – நிலை 3<br>பாடம் 1 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – கர்த்தருக்காக துன்பம் அனுபவித்தல் | A10 – நிலை 4<br>ஆராய்ச்சி 1 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – பிலிப்பியில் பவுல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி –** *அப்போஸ்தலர் 14: 1-21*<br>**முக்கிய வசனம் –***1 பேதுரு 4: 16*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் தங்களுடைய விசுவாசத்திற்காக துன்பப்படுகிறார்கள், சூழ்நிலைகள் கடினமாகும்போது கைவிடக்கூடாது.<br>2. கிறிஸ்துவர்கள் உயிரோடுள்ள தேவனில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், அவரேநமது சிருஷ்டிகரும் நமக்குத் தேவையானதை வழங்குபவரும் ஆவார். | **வேதப் பகுதி –***அப்போஸ்தலர் 16: 9-40*<br>**முக்கிய வசனம் –***அப்போஸ்தலர் 16: 31*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவனுடைய வழிநடத்துதலைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவது முக்கியம்.<br>2. தேவன் மக்களின் இருதயங்களைத் திறக்கிறார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வழியாகத்தான் எவருக்கும் இரட்சிப்பு வருகிறது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | சிருஷ்டிகராகிய தேவன் மீது விசுவாசம் வைப்பது ஏன் முக்கியம் என்பதை மாணவர்களோடு சேர்ந்து கண்டறியுங்கள்.<br>தேவனுக்கு முன்பாக நாம் பொறுப்புள்ளவர்களாகவும் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாகவும் இருக்கிறோம் என்ற கருத்தை மையப்படுத்திப் பேசுங்கள். | நம் அனைவருக்கும் ஏன் தேவனுடைய இரட்சிப்பு தேவை என்ற கேள்வியை மாணவர்கள் முன் வையுங்கள்.<br>தேவனுடைய இரட்சிப்பின் இயல்பை விவரிக்கவும்.<br>கர்த்தராகிய இயேசுவின் மூலமாகவே தேவன் செய்ததை விசுவாசிப்பதன் மூலமே நாம் இரட்சிக்கப்படுகிறோம், நம்முடைய சொந்தக் கிரியைகளினால் அல்ல என்பதை விளக்குங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுலும் பர்னபாவும் இக்கோனியாவுக்கு வந்தபோது அநேக யூதர்களும் புறஜாதியாரும் விசுவாசித்தார்கள், ஆனால் சில யூதர்கள் எதிர்ப்பைத் தூண்டிவிட்டார்கள்.<br>2. சுவிசேஷத்தின் காரணமாக அந்த நகரத்தார் இரண்டாகப் பிரிந்தனர், சிலர் பவுலையும் பர்னபாவையும் கல்லெறிந்துக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார்கள், ஆகையால் இவர்கள் லீஸ்திராவுக்குத் தப்பி ஓடிப்போக வேண்டியதாயிற்று.<br>3. இங்கே தேவன் ஒரு முடவனைக் குணமாக்கப் பவுலைப் பயன்படுத்தினார், இதன் விளைவாக அந்த நகர மக்கள் அவர்களைத் தெய்வங்கள் என நினைத்து, அவர்களுக்கு பலிகளைச் செலுத்த விரும்பினார்கள்.<br>4. மக்களைப் பயனற்ற விக்கிரகங்களை விடச்செய்து ஜீவனுள்ள தேவனிடத்திற்குக் கொண்டுவர தாங்கள் முயற்சித்ததாக பவுலும் பர்னபாவும் கூறினர்.தேவன் நமக்குக் கொடுக்கிற அனைத்தையும் அவர்கள் விளக்கினார்கள். (வசனம் 17)<br>5. அந்தியோகியாவிலும் இக்கோனியாலிலிருந்தும் யூதர்கள் வந்து, பவுலைக் கல்லெறிய ஜனங்களைத் தூண்டிவிட்டார்கள்; அவர் மரித்துப்போனார் என்று எண்ணி, பட்டணத்திலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள்.<br>6. அதிர்ஷ்டவசமாக பவுல் தப்பிப்பிழைத்தார், அடுத்த நாள் அவர்கள் தெர்பைக்குச் சென்றார்கள்.<br>7. *தேவன் யார் என்பதை வலியுறுத்துங்கள்.* ***(வசனங்கள் 15-17)***<br>8. *பவுலும் பர்னபாவும் போல விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொள்ளுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – லிஸ்திரா மற்றும் தெர்பையில் பவுலும் பர்னபாவும்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் ஆசியாவின் மற்ற பகுதிகளுக்கு போகாதபடி தெளிவாக வழிநடத்தப்பட்டார், ஆனால் மாசிடோனியாவுக்குப் போகும்படி வழிநடத்துவதை ஒருநாள் அவர் ஒரு தரிசனத்தில் கண்டார். (ஐரோப்பா)<br>2. ஐரோப்பாவை சுவிசேஷத்திற்கு வழிநடத்திய நிகழ்வுகளை விவரியுங்கள். ***(வசனம் 9)***<br>3. அவர் பிலிப்பியில் நதியருகே ஜெபித்துக்கொண்டிருந்த ஸ்திரீகளைச் சந்தித்தார். அதில் லீதியாளும் இருந்தாள்.<br>4. தேவன் லீதியாவின் இருதயத்தைத் திறந்தார் என்பதின் அர்த்தம் என்ன என்பதை விளக்குங்கள். ***(வசனம் 14)***<br>5. ஒரு குறிசொல்லும் பெண்ணிலிருந்து பொல்லாத ஆவியை வெளியே வரும்படி பவுல் சொன்னபோது, அவரும் சீலாவும் உள்ளூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.<br>6. ஒரு பூகம்பம் ஏற்பட்டது கைதிகள் விடுதலையாயினர். சிறைச்சாலை அதிகாரி தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்தார், ஆனால் யாரும் தப்பியோடவில்லை என பவுல் அவருக்கு உறுதியளித்தார்.<br>7. சிறைச்சாலை அதிகாரி கேட்ட கேள்வியையும் பவுல் கொடுத்த பதிலையும் தெளிவாக விளக்குங்கள். *அப்போஸ்தலர் (16: 31)*<br>8. *இரட்சிப்புக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மையமாக விளங்குவதை வலியுறுத்துங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள். காண்பியுங்கள்: FBI – பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்கு செல்கிறார்கள் மேலும் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப்படுகிறார்கள்(I)** |
| **மீள்பார்வை** | ***யாத்திராகமம் 20: 1-6***ஐ இன்றைய வேத பாடத்தோடு தொடர்புபடுத்திக்காட்டுங்கள்.<br>ஜீவனுள்ள தேவனின் உண்மைத்தன்மையைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவுங்கள். இன்றைய சமுதாயத்தில் எவ்விதமான விக்கிரகங்கள் நமக்கும் தேவனுக்கும் இடையில் வரலாம் என்பதைக் கவனியுங்கள். | பின்வரும் கேள்விகளைக் கொண்டு பாடத்தை மீளாய்வு செய்யுங்கள்:<br>1. சிறைச்சாலை அதிகாரியின் மனமாற்றத்திற்கு பிறகு உண்டான நிகழ்வுகளை விவரிக்கவும்.<br>2. இந்த வேதப்பகுதியில் ஞானஸ்நானத்திற்கான தன்மையும் தகுதியும் என்ன? ***(வசனங்கள் 15, 31-33)*** |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. தேவனுக்கு முன்னால் நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்னும் கருத்து நமக்கு எப்படி சவால் விடுகிறது? இது நமது கிறிஸ்தவ வாழ்வில் என்ன மாற்றங்களைச் செய்ய முடியும்?<br>2. 'ஹீரோ' வழிபாடு பற்றி ***வசனம் 15*** என்ன கற்பிக்கிறது? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இரட்சிப்பு தேவனால் மட்டுமே என்று கருத்தை புரிந்துகொள்ளுங்கள்.<br>2. விசுவாசிகளுடைய ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம். |

| | A10 – நிலை 3<br>பாடம் 2 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – வாழ்க்கைக்கான ஒரு நண்பர் | A10 – நிலை 4<br>ஆராய்ச்சி 2 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – தெசலோனிக்கேயா மற்றும் பெரேயாவில் பவுல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 16: 1-3; 2 தீமோத்தேயு 1: 1-5*<br>முக்கிய வசனம் –*2 தீமோத்தேயு 3: 15*<br>நாம் கற்றுக்கொள்வது:**<br>1. வேதவசனங்களை வாசிப்பதும் அறிந்துகொள்வதும் நமக்கு இரட்சிப்புக்கு ஞானத்தைப் உதவுகிறது.<br>2. கிறிஸ்தவ நண்பர்களைக் கொண்டிருப்பது முக்கியம், மேலும்ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 17: 1-14*<br>முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 17: 11*<br>நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழ வேண்டியது அவசியம் என்பதைப் பற்றி பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருக்கிறது.<br>2. கிறிஸ்துவ நம்பிக்கை என்ன என்பதை உறுதிப்படுத்த வேதவாக்கியங்களை ஆராய்ந்து படிப்பது முக்கியம். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நல்லது அல்லது கெட்டது – இதில் எது நம் வாழ்வில் மிகுந்த ஆதிக்கம் செலுத்துகிறது என்பதைக் கலந்துபேசுங்கள்.<br>நமது வாழ்வில் கிறிஸ்தவ காரியங்கள் செல்வாக்கு பெற்றிருப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்களோடு சேர்ந்து கண்டறியுங்கள்.<br>உங்களிடத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது யார், அவர்கள் என்ன வழிகளில் உங்களிடத்தில் கிறிஸ்துவ விசுவாசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றிப் பேசுங்கள். | மாணவர்கள் யாரை மிகவும் மதிப்புக்குரிய நபர்களாகக் கருதுகிறார்கள், ஏன் அவர்களை முக்கியமானவர்கள் என்று நினைக்கிறார்களென்று அவர்களிடம் கேளுங்கள்.<br>கிறிஸ்துவ செய்தி என்பது ஒரு தன்னிகரற்ற நபரைப் பற்றியது என்பதை விளக்குங்கள்.<br>***அப்போஸ்தலர் 17: 1-14***ல் வாசிக்கப்பட்ட செய்திக்கு செவிகொடுக்க அவர்களுக்கு அழைப்பு கொடுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:<br>கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. தீமோத்தேயுவின் குடும்பத்தைப் பற்றி விளக்குங்கள்.<br>2. தீமோத்தேயுவின் விசுவாசத்திற்கு அவரது பாட்டியும் தாயும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை விளக்குங்கள்.<br>3. ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை மதிப்புள்ளதாக கருதுவது எவ்வளவு முக்கியம் என்று சிந்தியுங்கள்.<br>4. தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வது அவசியம் என்று பவுல் ஏன் நம்பினார் என்பதைக் கவனியுங்கள்.<br>இதிலிருந்து நாம் என்னப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?<br>5. தீமோத்தேயு பவுலுடன் பயணம் செய்யத் தொடங்கினார், அவருக்கு பெரும் உதவியாய்த் திகழ்ந்தார்.<br>6. தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். ***(2 தீமோத்தேயு 1: 3-5)***<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI –** சரியான **FBI** இல்லை.**(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:<br>கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் பிலிப்பியில் இருந்து தெசலோனிக்கா வரை சென்று அங்கு ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார்.<br>2. *தெசலோனிக்கேயில் உள்ள ஜெப ஆலயத்தில் பவுல் பிரசங்கித்த செய்தியை விளக்குங்கள்.*<br>*'கிறிஸ்து' என்பதன் அர்த்தம் 'தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்' என்பதையும் விளக்குங்கள்.*<br>3. *செய்தியின் தாக்கங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.*<br>4. *பின்வரும் வார்த்தைகளை கவனியுங்கள்: " இதோ உலகத்தைக் கலக்குகிறவர்கள்."* ***(வசனம் 6)***<br>5. மீண்டும் ஒருமுறை பவுலும் சீலாவும் இரவில் விரைவாக வெளியேற வேண்டியிருந்தது, பின்பு அவர்கள் பெரேயாவுக்குப் போனார்கள்.<br>6. பெரேயாவிலிருந்த யூதர்கள் தெசலோனிக்கேயாவில் இருந்தவர்களைவிட வேறுபட்டவர்களாக இருந்தார்கள், அவர்கள் ஒவ்வொரு நாளும் வேதவாக்கியங்களைப் படித்தார்கள்.***(வசனங்கள் 11-12)***<br>7. இருந்தபோதிலும் அதிக எதிர்ப்பு இருந்ததால், பவுலை ஏதென்ஸுக்கு பாதுகாப்போடு அழைத்துச்செல்ல வேண்டியிருந்தது.<br>8. இன்றைய கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக சந்திக்கிற எதிர்ப்புகளையும் பவுலுக்கும் சீலாவுக்கும் நேரிட்ட எதிர்ப்பையும் ஒப்பிட்டுப்பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:** FBI **–தெசலோனிக்கா மற்றும் பெரேயாவில் பவுல்(I)** |
| **மீள்பார்வை** | முக்கிய வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள், இன்றைய பாடத்தை அந்த வசனம் எவ்வாறு சுருக்கமாக கூறுகிறது என்பதை மாணவர்களுடன் விவாதிக்கவும். | ***யோசுவா 1: 8***ஐ வாசித்து, அதை முக்கிய வசனத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.<br>***(அப்போஸ்தலர் 17: 11)*** கிறிஸ்தவர்களாகிய நமக்கு என்ன சவால்கள் இருக்கின்றன? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. கிறிஸ்துவ நண்பர்களை கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்க.<br>2. கிறிஸ்தவ நட்பினைத் தேடுங்கள்.<br>3. நமது நண்பர்களும் உறவினர்களும் கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம்வைக்க ஜெபம் செய்ய வேண்டும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. பைபிளை வாசிப்பது, படித்த பைபிள் கருத்துக்களின் அடிப்படையில் நம்முடைய எண்ணங்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவம். (முக்கிய வசனத்தைக் காண்க)<br>2. இயேசுவை ராஜா என்று விசுவாசிப்பது நம் வாழ்வில் எப்படி மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்? |

| | A10 - நிலை 3<br>**பாடம் 3 - பவுலின் வீரச்செயல்கள்**<br>**தலைப்பு - சிறையில் பவுல்** | A10 - நிலை 4<br>**ஆராய்ச்சி 3 - பவுலின் வீரச்செயல்கள்**<br>**தலைப்பு - ஏதென்ஸ் மற்றும் கொரிந்துவில் பவுல்** |
|---|---|---|
| | **வேதப் பகுதி - *அப்போஸ்தலர் 16: 16-34***<br>**முக்கிய வசனம் -*அப்போஸ்தலர் 16: 31***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இரட்சிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் இருக்கிறது.<br>2. இரட்சிக்கப்பட்டவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும். | **வேதப் பகுதி -*அப்போஸ்தலர் 17: 15-34; 18: 1-18***<br>**முக்கிய வசனம் -*அப்போஸ்தலர் 17: 30-31***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. மனந்திரும்ப வேண்டும் என்பது தேவனால் கட்டளையிடப்படுகிறது.<br>2. தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | மீட்கப்படுவதைக் குறித்த ஒரு கதையை மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.'இரட்சிக்கப்பட்டது', 'இரட்சகர்', 'இரட்சிப்பு' - இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை விளக்க இந்தக் கதையைப் பயன்படுத்தவும்.மாணவர்கள் தங்கள் வாழ்வில் இரட்சிப்பை அறிந்திருந்தால், அதைப் பகிர்ந்துகொள்ள அவர்களை ஊக்குவிக்கவும். | மாணவர்களை மனந்திரும்புதலின் வரையறையைச் சொல்லச் சொல்லுங்கள். 'மனந்திரும்புதல்' என்ற கருத்தை விளக்கும் விதமாக ***1 தெசலோனிக்கேயர் 1: 9*** ஐ பயன்படுத்துங்கள்.இரட்சகராகிய தேவனிடம் திரும்பிவரவேண்டும், இதில் நம் பழைய வாழ்க்கையைக் களைந்துவிட்டுச்செல்லுவதும் அடங்கியிருக்கிறது என்ற கருத்தினை வலியுறுத்துங்கள்.மனந்திரும்புதலின் அர்த்தத்தை வலுப்படுத்த சுவிசேஷத்தால் வாழ்க்கை மாற்றப்பட்டவர்களின் சாட்சிகளை ஊக்குவிக்க வேண்டும். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஐரோப்பாவை சுவிசேஷத்திற்கு வழிநடத்திய நிகழ்வுகளை விவரியுங்கள். ***(வசனம் 9)***<br>2. அவர் பிலிப்பியில் நதியருகே ஜெபித்துக்கொண்டிருந்த ஸ்திரீகளைச் சந்தித்தார். அதில் லீதியாளும் இருந்தாள்.<br>3. தேவன் லீதியாவின் இருதயத்தைத் திறந்தார் என்பதின் அர்த்தம் என்ன என்பதை விளக்குங்கள். ***(வசனம் 14)***<br>4. ஒரு குறிசொல்லும் பெண்ணிலிருந்து பொல்லாத ஆவியை வெளியே வரும்படி பவுல் சொன்னபோது, அவரும் சீலாவும் உள்ளூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.<br>5. ஒரு பூகம்பம் ஏற்பட்டது கைதிகள் விடுதலையாயினர். சிறைச்சாலை அதிகாரி தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்தார், ஆனால் யாரும் தப்பியோடவில்லை என பவுல் அவருக்கு உறுதியளித்தார்.<br>6. சிறைச்சாலை அதிகாரி கேட்ட கேள்வியையும் பவுல் கொடுத்த பதிலையும் தெளிவாக விளக்குங்கள். ***அப்போஸ்தலர் (16: 31)***<br>7. *இயேசுவின் நாமத்தில் இருக்கும் அதிகாரத்தை வலியுறுத்துங்கள்.* ***(வசனம் 18)***<br>8. *சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் அநியாயமாக நடத்தப்படக் கூடும் என்பதை விளக்குங்கள்.* ***(வசனம் 23)*****முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**3ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI - பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்கு செல்கிறார்கள் மேலும் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப்படுகிறார்கள்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் அத்தேனே பட்டணத்திற்கு வந்து, தனது சக ஊழியர்களும் அங்குவரக் காத்திருக்கிறார். பட்டணத்தைச் சுற்றிநடந்து<br>1. சிலைகள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதைப் பார்த்து அவர் வருத்தப்பட்டார்.<br>2. சந்தை மற்றும் ஜெப ஆலயத்தில் பவுல் இயேசுவைப் பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார்.<br>3. பவுல் ஒரு மையப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கே அவர் புதிய போதனைகளைப் பற்றி விளக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்.<br>4. உலகத்தை படைத்த மகா சிருஷ்டிகரான தேவனைப் பற்றி பவுல் பேசினார், ஆனால் அவர் நம்மில் எவருக்குமே தூரத்திலில்லை எனவும் கூறினார்.<br>5. தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பின, தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் அவர் மேலும் கூறினார்.<br>6. உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டபோது அநேகர் அவரைப் பரியாசம்பண்ணினார்கள், சிலர் விசுவாசித்தார்கள். பவுல் விரைவில் கொரிந்துவுக்குச் சென்றார்.<br>7. அங்கு அவர் ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் சந்தித்தார், அவர்கள் அவருக்கு உதவியாளர்களாக ஆனார்கள்.<br>8. அவர் கொரிந்துவில் 18 மாதங்கள் தங்கியிருந்தார், அநேகர் விசுவாசிகள் ஆனார்கள்.<br>7. ***அப்போஸ்தலர் 18: 9*** - கொரிந்து பட்டணத்தில் அவர் பாதுகாப்பாக இருப்பார் என்று தேவன் அவருக்கு உறுதியளித்தார்.<br>8. *பவுல் தேவனைப் பற்றி* ***வசனங்கள் 24-31****-ல் கற்பிக்கிறவற்றை வலியுறுத்துங்கள்.*<br>9. *தீர்ப்பின் தன்மையைக் குறித்து யோசித்துப் பாருங்கள்.*<br>10. *ஏதேன்ஸிலும் கொரிந்துவிலும் பவுலின் செய்திக்கு மக்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைக் கவனியுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 3ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - கொரிந்துவிலும் ஏதென்ஸிலும் பவுல்(I)** |
| **மீள்பார்வை** | பவுலும் சீலாவும் பிலிப்பியில் இருக்கும் கதையை ஒரு கிராஃபிட்டி போர்டாக உருவாக்கவும். | அத்தேனே பட்டணத்தில் பிரசங்கிக்கையில் பவுலின் அணுகுமுறையை கொரிந்து பட்டணத்தில் பிரசங்கிப்பதோடு ஒப்பிடவும்.இந்த அணுகுமுறைகளில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? ஏன்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பை அறிவதின் முக்கியத்துவம்.<br>2. ஞானஸ்நானத்தில் மக்கள் மத்தியில் கிறிஸ்துவோடு நம்மை அடையாளப்படுத்துவது. | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. மனந்திரும்புதலின் முக்கியத்துவம் மற்றும் ஒரு கிறிஸ்துவர் அனுதினமும் பாவத்திலிருந்து தேவனிடத்தில் மனந்திரும்ப வேண்டும் என்பது.<br>2. சுவிசேஷத்தைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவது, மேலும் தேவன் ஒரு நாள் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்பது. |

| | A10 – நிலை 3<br>பாடம் 4 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – ஏதென்ஸ் நகரம் | A10 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – எபேசுவில் பவுல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 17: 10-34***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 17: 30***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பூமியைப் படைத்த தேவன் ஜீவனுள்ள தேவன்.<br>2. எல்லா மக்களையும் மனந்திரும்பும்படி தேவன் கட்டளையிடுகிறார்.<br>3. தேவன் உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 19: 1-41***<br>**முக்கிய வசனம் –*எபேசியர் 2: 8-9***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவனுடைய வார்த்தைமற்றும் வேலை எபேசுவில் பரவியது.<br>2. கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமையடைந்தது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | விக்கிரகங்களை என்னவென்று புரிந்துகொண்டிருக்கிறார்கள் என வகுப்பிலுள்ளவர்களைக் கேளுங்கள். ஒரு சிலை என்பதன் வரையறையைச் சொல்லச் சொல்லுங்கள். யாத்திராகமம் முதல் இரண்டு கட்டளைகளை அவர்களுடன் கலந்துபேசுங்கள் ***-யாத்திராகமம் 20ம் அதிகாரம்.***<br>மனந்திரும்புதலின் அர்த்தத்தை விளக்குவதற்கு ***1 தெசலோனிக்கேயர் 1: 9*** ஐப் பயன்படுத்துங்கள். | ஆய்வு 3ல் கற்றுக்கொண்ட பாடங்களை மீளாய்வு செய்யுங்கள். மனந்திரும்புதலைப் பற்றியும் அது அன்றாட வாழ்வில் என்ன அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள்.<br>மனந்திரும்புதல் நம் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கிறது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.<br>***அப்போஸ்தலர் 19: 18-20***ஐ கலந்தாலோசியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் அத்தேனே பட்டணத்திற்கு வந்து தனது சக ஊழியர்களும் அங்குவரக் காத்திருக்கிறார். பட்டணத்தைச் சுற்றிநடந்துசிலைகள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதைப் பார்த்து அவர் வருத்தப்பட்டார்.<br>2. சந்தை மற்றும் ஜெப ஆலயத்தில் பவுல் இயேசுவைப் பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார்.<br>3. பவுல் ஒரு மையப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கே அவர் புதிய போதனைகளைப் பற்றி விளக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்.<br>4. உலகத்தை படைத்த மகா சிருஷ்டிகரான தேவனைப் பற்றி பவுல் பேசினார், ஆனால் அவர் நம்மில் எவருக்குமே தூரத்திலில்லை எனவும் கூறினார்.<br>தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பின, தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் அவர் மேலும் கூறினார்.<br>5. உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டபோது அநேகர் அவரைப் பரியாசம்பண்ணினார்கள், சிலர் விசுவாசித்தார்கள். பவுல் விரைவில் கொரிந்துவுக்குச் சென்றார்.<br>6. பவுல் தேவனைப் பற்றி கற்பிக்கிறவற்றை வலியுறுத்துங்கள் ***(வசனங்கள் 24-31).***<br>7. இயேசுவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். ***(வசனம் 31)***<br>8. பவுலின் பிரசங்கத்திற்கு மக்களின் பதிற்செயலைப் பற்றி விவாதிக்கவும். ***(வசனங்கள் 32-34)***<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI –** ஏதென்ஸில் பவுல்**(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இப்போது எபேசுவிற்கு செல்கிறார், அங்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிராத சீடர்களை சந்திக்கிறார்.<br>2. யோவானின் சீடர்களுக்குப் பவுல் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதின் அவசியத்தை விளக்குங்கள்.<br>3. ஜெப ஆலயத்தில் இருந்த யூதர்கள் பவுலின் பிரசங்கத்தை மீண்டும் ஒருமுறை புறக்கணித்தபடியால், அவர் ஒரு விரிவுரையாற்றும் மண்டபத்திற்கு சென்று இரண்டு வருடங்கள் தங்கினார்.<br>4. தேவன் பவுல் மூலம் அசாதாரணமான அற்புதங்களை செய்தார். ***(வசனம் 11)*** பவுலின் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் பலர் விசுவாசம் அடைந்து, அந்த விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை விளக்குங்கள்.<br>5. எபேசுவில் கலவரத்திற்கு வழிவகுத்த சம்பவங்களை சுருக்கமாக விவரிக்கவும். ***(வசனங்கள் 23-41)***<br>6. *தேவனுடைய இராஜ்ஜியம் என்பதின் அர்த்தம் என்ன என்பதை விளக்குங்கள்.* ***(வசனம் 8)***<br>7. *எபேசுவில் தேவனுடைய வார்த்தை எவ்வாறு வெற்றியடைந்தது என்பதை விளக்குங்கள்.* ***(வசனம் 20)***<br>8. *புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் கடந்தகால பாரம்பரியங்களையும் பழக்கவழக்கங்களையும் எவ்வாறு சமாளிக்க வேண்டியிருந்திருக்கும் என்பதை விவாதிக்கவும்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 4ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – எபேசுவில் பவுல், மற்றும் கொல்லர்கள் இந்த மார்க்கத்திற்கு எதிராக எபேசுவில் கலகம்புரிதல்(I)** |
| **மீள்பார்வை** | கிறிஸ்துவ செய்தி உங்கள் சமூகத்தில் ஒரு சவாலான முறையில் எப்படி வழங்கலாம் என்பதை குழுக்களாக பிரிந்து விவாதிக்க. ஒரு சுவிசேஷ நிகழ்ச்சியின் மூலம் இதை உருவாக்குங்கள். | 'சுவிசேஷம் எபேசுவுக்கு வருகிறது' என்ற தலைப்பில் ஒரு மைண்டு மேப் வரைக.<br>***அப்போஸ்தலர் 19***ல் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளைப் பற்றி ஒரு செய்தித்தாள் கட்டுரையாக எழுதுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. தனிப்பட்ட மனந்திரும்புதல் பற்றி. பாவத்திலிருந்து தேவனிடம் மனந்திரும்புதல் என்றால் என்ன அர்த்தம்?<br>2. சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி. நற்செய்தியின் செய்தியை நாம் எப்படி பகிர்ந்துகொள்ள முடியும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. கிறிஸ்துவ விசுவாசம் 'மார்க்கம்' என்று அழைக்கப்படுகிறது. ***(வசனம் 9)*** இதன் பொருள் என்ன? இது நமக்கு எவ்வாறு சவாலாய் காணப்படுகிறது?<br>2. நகர எழுத்தராய் இருந்தவரின் செயல்களில் இருந்து பொதுவான கடமைகளைப் பற்றி நாம் எந்த நடைமுறைப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? ***வசனங்கள் 35-41.*** |

| | A11 – நிலை 3<br>**பாடம் 1 – பவுலின் வீரச்செயல்கள்**<br>**தலைப்பு – மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்** | A11 – நிலை 4<br>**ஆராய்ச்சி 1 – பவுலின் சோதனைகள்**<br>**தலைப்பு – எருசலேம் மற்றும் கூட்டத்தினர்** |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 18: 1-11***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 18: 9-10***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. சென்ற இடமெல்லாம்இயேசுவே கிறிஸ்து என்பதுதான் பவுல் பிரசங்கித்த செய்தியாகும்.<br>2. தேவன் பவுலுடனேகூட இருந்து, ஒரு தரிசனத்தின் மூலம் அவரை உற்சாகப்படுத்தினார். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 21: 17-40; 22: 1-30*முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 22: 14 & 15***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பவுல் ஆலயத்தில் கைது செய்யப்பட்டபோதுமக்களுக்கு அவருடைய சாட்சியை சொன்னார்.<br>2. புறஜாதியார் செவிசாய்த்து நற்செய்தியை ஏற்றுக்கொண்டனர் என்ற உண்மையையூதர்கள் வெறுத்தார்கள்.<br>3. பவுலை சவுக்கால் அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினபோது அவர் தன்னுடைய ரோம குடியுரிமையை கோருகிறார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | தேவன் உங்களை எவ்வாறு உற்சாகப்படுத்தினார் என்பதற்கு உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து ஒரு சம்பவத்தை மாணவர்களுக்குச் சொல்லுங்கள். கிறிஸ்தவ வாழ்வில் உற்சாகப்படுத்துவதின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றி பேசுங்கள்.<br>அவர்கள் பெற்றுள்ள ஊக்கங்களுக்கான உதாரணங்களைக் கொடுக்க மாணவர்களைக் கேளுங்கள். | எருசலேமுக்கு வந்தபோது பவுல் எதிர்கொண்ட எதிர்ப்பைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துங்கள்.<br>Voice of the Martyrs வலைத்தளத்தை (அல்லது மற்றொரு தகவல்மூலத்தை) பயன்படுத்தி, தாங்கள் உபத்திரவப்பட நேர்ந்தபோதும் அதற்கு பயப்படாமல் கிறிஸ்துவுக்காக சாட்சிகொடுத்த கிறிஸ்தவர்களின் உதாரணங்களை எடுத்துக்கூறுங்கள்.<br>ஒரு கிறிஸ்துவர் இதை ஏன் செய்ய வேண்டும் என்று மாணவர்களிடம் கேளுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் கொரிந்துவில் வந்து, ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் சந்திக்கிறார், அவர்கள் அவருக்கு உதவியாளர்களாக ஆனார்கள்.<br>2. வழக்கமான ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்று அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிற மேசியா இயேசுவே என யூதர்களை சம்மதிக்கவைத்தார்.<br>3. யூதர்கள் கொடுமைக்காரர்களாக ஆனபோது, அவர் அங்கிருந்துபோய் அடுத்த திறந்த வாசலுள்ள புறஜாதி மக்களுக்கு இப்போது இன்னும் அதிகமாக உபதேசித்தார். அநேகர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.<br>4. ***வசனம் 18: 9***ல் கொரிந்துவில் பவுலுடன் இருந்து அவரை பாதுகாப்பதாக தேவன் உறுதியளித்தார். இது பவுலுக்கு எவ்வளவு பெரிய ஊக்கத்தை அளித்திருக்கும் என்பதை விளக்குங்கள்.<br>5. *பவுல் செய்தியை எவ்வாறு பரப்பினார் என்பதை வலியுறுத்துங்கள். **(வசனங்கள் 4 & 11)***<br>6. *தேவனுடைய வார்த்தை கொரிந்துவில் எவ்வாறு பரவியது என்பதையும் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தையும் கவனியுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – கொரிந்துவிலும் ஏதென்ஸிலும் பவுல்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் எருசலேமில் வந்து தேவாலத்துக்குச் செல்கிறார்.<br>1. தேவாலயத்தில் ஒரு புறஜாதியானை அழைத்துச் சென்றதாக தவறாக அவர்மீது குற்றம்சாட்டப்பட்டதால், அங்கே ஒரு கலகம் உண்டானது.<br>2. அவர் ரோம தளபதி மூலம் மீட்கப்பட்டார், பாசறையின் படிகளில் நின்று கூட்டத்தில் பேச அனுமதியளிக்கப்பட்டார்.<br>3. பவுல் மிகத் தெளிவான சாட்சியத்தைக் கொடுத்தார். ***(22: 1-21)***புறஜாதிகளிடத்திற்கு தான் அனுப்பப்பட்டதாக அவர் குறிப்பிட்டபோது, இன்னொரு கலவரமும் ஏற்பட்டது.<br>4. அவர் பாசறை முகாமில் கொண்டுபோகப்பட்டார், அவர் தான் ஒரு ரோம குடிமகன் என்று சொல்லாமலிருந்தால் அவர்கள் அவரை சவுக்கால் அடித்திருப்பார்கள், குற்றம் சாட்டப்பட்டவரை குற்றம் நிரூபிக்கப்படும்வரை சவுக்கால் அடிக்கக்கூடாது.<br>5. பவுல் ஏன் தேவாலயத்திற்குச் சென்றார் என்பதை வலியுறுத்துங்கள்.<br>6. பவுலின் மனமாற்றத்தின் தன்மையையும் வலியுறுத்துங்கள்.<br>7. கூட்டம் ஏன் பவுலுக்கு விரோதமாக இருந்தது என்பதை விளக்குங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பவுல் எருசலேமில் கைதுசெய்யப்பட்டார். (I)** |
| **மீள்பார்வை** | ஒரு வினாடி வினா மூலம் கதையை மீளாய்வு செய்யவும். | எருசலேமில் இருந்தபோது பவுல் ஆலயத்திற்குள் பிரவேசித்தது ஞானமானதா என்பதைப் பற்றி ஒரு வகுப்பறை விவாதத்தை தொடங்குங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. ***சங்கீதம் 23***ஐ வாசித்து, தேவனுடைய பிரசன்னம் கூட இருப்பதின் வாக்குத்தத்தம் கிறிஸ்துவர்களாகிய நம்மை எப்படி உற்சாகப்படுத்துகிறது என்பதை சிந்தித்துப்பாருங்கள்.<br>2. நாம் மக்களுடன் இருப்பதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கக்கூடிய வழிகளை யோசித்துப்பாருங்கள். இதை செயல்படுத்துங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. உலகம் முழுவதும் கிறிஸ்துவர்கள் அனுதினமும் கைது செய்யப்படுகின்றனர். துன்புறுத்தப்பட்ட கிறிஸ்துவர்களை நினைத்து அவர்களுக்காக வழக்கமான ஜெப நேரத்தை ஏற்பாடு செய்யுங்கள்.<br>2. மாணவர்கள் தங்கள் வாரத்தையை மதிப்பாய்வு செய்யும்படி கேளுங்கள், கிறிஸ்துவைப் பற்றி சாட்சி கூற தவறவிட்டவாய்ப்புகளை நினைகூரச்செய்யுங்கள். எதிர்காலத்தில் சாட்சியைப் பகிர்ந்துகொள்ள தேவன் அவர்களுக்கு விசுவாசத்தையும் தைரியத்தையும் கொடுத்து உதவும்படி அவரிடம் ஜெபிக்கச் சொல்லுங்கள். |

| | A11 – நிலை 3<br>பாடம் 2 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – அவரை கொல்ல சதி | A11 – நிலை 4<br>ஆராய்ச்சி 2 – பவுலின் சோதனைகள்<br>தலைப்பு – செசரியா பட்டணமும் ஆளுநர்களும் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 23: 10-24; 24: 22-27***<br>**முக்கிய வசனம் –*சங்கீதம் 18: 30***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. யூதர்கள் பவுலைக் கொல்ல முயன்றபோது தேவன் அவரை உற்சாகப்படுத்தினார்.<br>2. பவுல் கைதாகியிருந்தபோதும் தொடர்ந்து விசுவாசமாகிய தேவனுடைய வார்த்தையை அறிவித்தார். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 23: 23-26; 24: 1-27; 25: 1-12***<br>**முக்கிய வசனம் –*1 பேதுரு 3: 15***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பவுல் பாதுகாப்புக்காக செசரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்இறுதியில் சீசருக்கு வேண்டுகோள் விடுக்கிறார்.<br>2. அவர் எதிர்கொண்ட பல்வேறு விசாரணைகளிலும், பவுல் நீதி, சுய கட்டுப்பாடு மற்றும் வரப்போகும் நியாயத்தீர்ப்புப் பற்றி பிரசங்கித்தார். *( 24:25)* |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பவுலின் நாட்களில் ரோம பேரரசின் அதிகாரத்தை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். ஒரு கேடயம் (கவசம்) என்றால் என்ன என்பதை விளக்குங்கள். பண்டைய கிரேக்க–ரோம உலகத்தில் ஒரு சிப்பாயி கேடயத்தைப் பிடித்து நிற்பதை விவரிக்க படங்களை உதாரணங்களாகக் காட்டவும். கர்த்தர் தமது மக்களுக்கு எப்படிக் கேடயமாக விளங்குகிறார் என்பதை விளக்குங்கள்.முக்கிய வசனமாகிய ***சங்கீதம் 18: 30***ஐ கற்றுக்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கவும். | 1521ம் ஆண்டு வார்ம்ஸ் என்ற இடத்தில் மார்ட்டின் லூதருக்கு எதிராகப் பிறப்பித்த அரசாணைக்கு பணியாமல் மார்ட்டின் லூதர் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானித்த சம்பவத்தை இங்கேத் தொடர்புபடுத்திக் காட்டுங்கள். வார்ம்லில் அவர் பேசிய வார்த்தைகள் கவனிக்கத்தக்கவை: "வேதப் புஸ்தகமும் சுத்த பகுத்தறியும் என்னை இணங்கச்செய்யும்வரை... என் மனச்சாட்சி தேவனுடைய வசனத்தால் கட்டப்பட்டிருக்கும். எனது கொள்கையை மறுதலிக்க மாட்டேன், எதையும் மறுதலிக்கவும் என்னால் முடியாது, ஏனென்றால் மனச்சாட்சிக்கு விரோதமாக செல்வது சரியானதோ பாதுகாப்பானதோ அல்ல. தேவன் எனக்கு உதவிசெய்வாராக. ஆமென்." பவுலின் அனுபவங்களுக்கு இதனை உதாரணமாக அறிமுகப்படுத்துங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் யூத மதகுருக்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறார். (ஆலோசனைச் சங்கம்)<br>2. பவுல் உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டுப் பேசியதின் காரணமாக ஒரு பெரிய கிளர்ச்சி உண்டானது;<br>சிலர் விசுவாசித்தனர், ஆனால் மற்றவர்கள் அவ்வாறு செய்யவில்லை. (23: 9)<br>3. பவுலின் உயிருக்கு ஆபத்து இருந்ததால் ரோமத் தளபதியால் அவர் மீட்கப்பட்டார்.<br>4. நற்செய்தியைப் பரப்ப ரோமாபுரிக்குச் செல்லவேண்டி இருப்பதால் தைரியத்துடன் இருக்கவேண்டும் என அந்த இரவில் பவுலின் அருகில் நின்று தேவன் சொன்னார்.<br>5. சில யூதர்கள், பவுல் மரிக்கும்வரை சாப்பிடாமலும் குடிக்காமலும் இருப்போம் என சபதம் எடுத்து, அவரைக் கொலைசெய்ய ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள்.<br>6. அதிர்ஷ்டவசமாக பவுலின் சகோதரியின் மகன் அந்தச் சதித்திட்டத்தைக் கேள்விப்பட்டு அதைத் தளபதியிடம் சொன்னதால், அவர் பவுலுக்குப் பாதுகாப்பு அளித்து செசரியாவுக்குக் கொண்டுவந்தார்.<br>7. பின்னர் பவுல் ரோம ஆளுநர், பெஸ்துவுக்கு முன்பாக நின்றுமறுபடியும் சுவிசேஷத்தை விளக்கினார்.<br>8. *பவுல் பேலிக்ஸுக்குக்குப் போதித்த சுவிசேஷத்தை விளக்குங்கள், இன்றும் அந்தச் செய்தி எவ்வாறு நமக்குப் பொருத்தமுடையதாய் இருக்கிறது என்பதையும் விளக்குங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பவுல் எருசலேமில் கைதுசெய்யப்பட்டு, பெஸ்துவின் முன்பாக விசாரிக்கப்படுதல்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் செசரியாவுக்குத் தன் சொந்த பாதுகாப்பிற்காக அழைத்துச் செல்லப்பட்டு, ஆளுநர் பேலிக்ஸ் முன்னால் கொண்டுவரப்படுகிறார்.<br>2. பின்பு, பேலிக்ஸுக்கு முன்பாக விசாரணை நடந்தது; யூதத் தலைவர்கள் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்திக் கலவரங்களை உண்டாக்கியதாகக் கூக்குரலிட்டார்கள்.<br>3. பவுல் குற்றஞ்சாட்டியவர்களுக்கு பதிலளிக்கிறார், பேலிக்ஸ் பவுலோடு மற்றொரு பேட்டி காண்கிறார், அப்பொழுது இயேசுவை விசுவாசிப்பதைப் பற்றி தெளிவாக பவுல் பேசினார். *(24:24)*<br>4. வேறொரு ஆளுநர் வரும்வரை பவுல் சிறையில் அடைக்கப்பட்டார்.<br>5. இப்பொழுது பவுல் பெஸ்துவுக்கு முன்பாக வருகிறார், மறுபடியும் யூத தலைவர்கள் வந்து அவர்மீது குற்றஞ் சாட்டினார்கள். பவுல் எருசலேமுக்குச் செல்ல மறுத்து சீசருக்கு வேண்டுகோள்விடுக்க, ரோமாபுரிக்கு போகும்படி பெஸ்து கட்டளையிடுகிறார்.<br>6. *பேலிக்ஸுக்கு முன்பாக பவுல் எப்படித் தன்னையே தற்காத்துப் பேசினார் என்பதை விவாதிக்கவும்.*<br>7. *பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு பேலிக்ஸ் ஏன் நடுங்கினார் என்பதைக் கவனியுங்கள். (24:25)*<br>8. *பவுல் ஏன் சீசருக்கு முறையிட்டார், இதன் அர்த்தம் என்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பெஸ்துவின் முன்பாக பவுலின் விசாரணை(I)** |
| **மீள்பார்வை** | 'தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருத்தல்' என்ற தலைப்பில் பவுலுடைய ஒரு டயரி குறிப்பாக எழுதுங்கள். | 'இயேசு கிறிஸ்துவுக்காக பவுல் தனது நிலைப்பாட்டை எடுத்துக்கொள்கிறார்' என்ற ஒரு கிராஃபிட்டி போர்டை உருவாக்கவும். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இரவு நேரத்தில் தேவனால் பவுலுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.<br>இந்த வாக்குறுதி நிறைவேறுவதை யாராவது அல்லது ஏதாவது தடுத்துநிறுத்த முடியுமா? இது எவ்வாறு நம்மை ஊக்குவிக்கிறது?<br>2. பேலிக்ஸ் நடுக்கமடைந்து, தேவனுடைய வார்த்தையைக் கேட்டபோது பயந்தான். ***(அப்போஸ்தலர் 24: 25)*** நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது பயப்படுகிறோமா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. ***2 தீமோத்தேயு 2: 3***ஐ படித்து தியானிக்கவும். கிறிஸ்தவர்களாக இருந்து நாம் அனுபவித்திருக்கிற கஷ்டங்களைப் பட்டியலிடுங்கள். இந்தப் பட்டியலில் உள்ளது மாத்திரமல்ல, எத்தனையோ கடினமான காலங்களில் தேவன் நம்மை எவ்வாறு உற்சாகப்படுத்தி கொண்டுவந்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள்.<br>2. சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு பவுல் தனது ரோம குடியுரிமையைப் பயன்படுத்தினார். நாம் அனுபவிக்கும் சிறப்புரிமைகளை சுவிசேஷத்தைப் பரப்புவதில் எவ்வாறு பயன்படுத்தலாம்? |

| | A11 – நிலை 3<br>பாடம் 3 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – ராஜாவின் முன்னால் | A11 – நிலை 4<br>ஆராய்ச்சி 3 – பவுலின் சோதனைகள்<br>தலைப்பு – செசரியா பட்டணமும் ராஜாவும் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *அப்போஸ்தலர் 25: 13-22; 26: 13-32***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 26: 22***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பெஸ்துவின் முன்பு பவுல் தன்மீதிருந்த குற்றச்சாட்டை எதிர்த்து வாதிக்க வேண்டியிருந்தது.<br>2. அகிரிப்பா ராஜா கிட்டத்தட்ட ஒரு கிறிஸ்துவர் ஆவதற்கு சம்மதிக்க வைப்பட்டிருந்தார். | **வேதப் பகுதி –*அப்போஸ்தலர் 25: 13-27; 26: 1-32***<br>**முக்கிய வசனம் –*அப்போஸ்தலர் 26: 28***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் பவுலின் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார். பெஸ்துபவுல் மரண தண்டனைக்கு உரியவரல்ல என்று கருதினார், அகிரிப்பாவோ பவுல் விடுதலை செய்யப்பட வேண்டுமென கருதினார்.<br>2. பவுல் இந்த நற்செய்தியை செய்தியை மிகத் தெளிவாக அறிவித்தார், அகிரிப்பாவை ஒரு கிறிஸ்துவராக ஆக சம்மதிக்கவைக்க முயன்றார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒருவர் எப்படி ஒரு கிறிஸ்தவர் ஆக முடியும் என்பதைப் பற்றி சிந்தித்துப்பார்க்கும்படி மாணவர்களைக் கேளுங்கள்.<br>மக்கள் வலுக்கட்டாயத்தினால் கிறிஸ்துவர் ஆவதில்லை என்பதை விளக்குங்கள். கிறிஸ்துவராக இருக்க மக்களை இணங்கச்செய்வதின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்தாலோசியுங்கள். சில நேரங்களில் மக்கள் சில காரியங்களைச் செய்ய வேண்டி கட்டாயப்படுத்தப்பட்டாலும், அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்ட காரியங்களைச் செய்ய இசைவில்லாமல் உறுதியாக இருக்கிறார்கள் என்பதை உங்கள் அனுபவத்திலிருந்து எடுத்துக்கூறுங்கள். | நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்திற்காக ஒருவேளை நாம் எதிர்கொள்ளக்கூடிய எதிர்ப்பைப் பற்றி பேசுங்கள்.<br>மாணவர்கள் அதை எப்படி சமாளிக்கலாம்?<br>***லூக்கா 21: 12-15**ல்* கிறிஸ்துவின் சீஷர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நினைவுகூறவும்.<br>இந்த ஆய்வில் இவை எவ்வாறு நிறைவேறும் என்பதை கவனியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இரண்டு வருடங்களுக்கு சிறையில் இருக்கிறார். இப்போது பெஸ்து ஒரு புதிய கவர்னராக இருக்கிறார். யூதர்கள் பவுலை எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டார்கள்; ஆனால் ரோமில் விசாரணை செய்யப்பட வேண்டுமென பவுல் கூறினார்.<br>2. அகிரிப்பா ராஜாவும் அவருடைய மனைவி பெர்னீஸும் செசரியாவுக்கு வருகிறார்கள், அவர்கள் சிறைப்பட்டிருக்கும் பவுலைப் பற்றிக் கேட்க விரும்புகிறார்கள்.<br>3. பவுல் அகிரிப்பாவுக்கு முன் கொண்டுவரப்படுகிறார்.<br>4. பவுல் தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை அவரிடம் விளக்குகிறார். *(26: 1-23)*<br>5. பெஸ்து பவுலுக்கு பைத்தியம் என்கிறார்! கிட்டத்தட்ட தன்னை ஒரு கிறிஸ்துவர் ஆவதற்கு பவுல் இணங்கச் செய்துவிட்டதை அகிரிப்பா ஒப்புக்கொள்கிறார்.<br>இருவரும் பவுலை விடுவிக்க ஒப்புக்கொண்டாலும், பவுல்சீசருக்கு முறையிட்டதால் அவர் ரோமிற்குச் செல்ல வேண்டியதாயிற்று.<br>6. *பெஸ்துவின் முன் பவுலின் தற்காப்பு வாதத்தையும், அவருடைய தீர்ப்பையும் வலியுறுத்துங்கள். (26: 24-25)அகிரிப்பா ஒரு கிறிஸ்தவராக மாறஅவரை இணங்கச்செய்ய பவுல் எப்படி முயன்றார் என்பதைக் கவனியுங்கள்.*<br>7. *அகிரிப்பாவின் அறிக்கைசெய்தலுக்கு பவுல் எவ்வாறு பதிலளித்தார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். (26: 29)*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**3ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பெஸ்துவுக்கும் அகிரிப்பாவுக்கும் முன்பாக பவுல் விசாரணை செய்யப்படுதல் (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இரண்டு வருடங்களுக்கு சிறையில் இருக்கிறார். இப்போது பெஸ்து ஒரு புதிய கவர்னராக இருக்கிறார். யூதர்கள் பவுலை எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டார்கள்; ஆனால் ரோமில் விசாரணை செய்யப்பட வேண்டுமென பவுல் கூறினார்.<br>2. அகிரிப்பா ராஜாவும் அவருடைய மனைவி பெர்னீஸும் செசரியாவுக்கு வருகிறார்கள், அவர்கள் சிறைப்பட்டிருக்கும் பவுலைப் பற்றிக் கேட்க விரும்புகிறார்கள். பவுல் அகிரிப்பாவுக்கு முன் கொண்டுவரப்படுகிறார்.<br>3. பவுல் தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை அவரிடம் விளக்குகிறார். *(26: 1-23)*<br>4. பெஸ்து பவுலுக்கு பைத்தியம் என்கிறார்! கிட்டத்தட்ட தன்னை ஒரு கிறிஸ்துவர் ஆவதற்கு பவுல் இணங்கச் செய்துவிட்டதை அகிரிப்பா ஒப்புக்கொள்கிறார். இருவரும் பவுலை விடுவிக்க ஒப்புக்கொண்டாலும், பவுல் சீசருக்கு முறையிட்டதால் அவர் ரோமிற்கு செல்ல வேண்டியதாயிற்று.<br>5. *பெஸ்துவின் முன் பவுலின் தற்காப்பு வாதத்தையும், அவருடைய தீர்ப்பையும் வலியுறுத்துங்கள். (26: 24-25)*<br>*அகிரிப்பாவை ஒரு கிறிஸ்தவராக மாறஅவரைஇணங்கச்செய்ய பவுல் எப்படி முயன்றார் என்பதைக் கவனியுங்கள்.*<br>6. *அகிரிப்பாவின் அறிக்கைசெய்தலுக்கு பவுல் எவ்வாறு பதிலளித்தார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். (26: 29)*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 3ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பெசுவுக்கும் அகிரிப்பாவுக்கும் முன்பாக பவுல் விசாரணை செய்யப்படுதல் (I)** |
| **மீள்பார்வை** | 'கிட்டத்தட்ட சம்மதிக்கவைத்தார்' என்ற தலைப்பில் ஒரு சபை சுவரொட்டியை உருவாக்கவும். | ஆய்வை நினைவுகூர்ந்து பின்வருபவம் கூற்றைப் பற்றி விவாதிக்கவும்: 'கட்டாயப்படுத்துவதை விட இணங்கவைப்பது சிறந்தது'. இந்த ஆய்வில் நாம் கற்றுக்கொண்டிருப்பதோடு இந்தக் கூற்று எவ்வாறு தொடர்புடையதாயிருக்கிறது? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இந்தப் பத்தியில் நற்செய்தியை அறிவிப்பதல் பவுலின் அணுகுமுறை எவ்வாறு நமக்கு சவாலாய் இருக்கிறது என்பதை கவனியுங்கள். நமது அணுகுமுறையில் என்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்?<br>2. வகுப்பில் விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். ஒரு மாணவன் மற்றொரு மாணவனை கிறிஸ்துவன் ஆக இணங்கச் செய்ய முயற்சிசெய்ய வேண்டும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. அப்போஸ்தலர் புத்தகத்தில் சுவிசேஷ செய்திக்கு யூத அதிகாரிகளின் மனப்பான்மையை ரோம அதிகாரிகளின் மனப்பான்மையோடு வேறுபடுத்திப் பாருங்கள். சுவிசேஷ செய்திக்கு மக்களின் பிரதிபலிப்புகளிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்?<br>2. நற்செய்தியை அறிவிக்க நமது அணுகுமுறைகளைக் குறித்து இன்றைய பாடம் நமக்கு எவ்வாறு சவால்களை விடுக்கிறது? |

| | A11 – நிலை 3<br>பாடம் 4 – பவுலின் வீரச்செயல்கள்<br>தலைப்பு – கப்பல் சேதமடைதல் | A11 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 –பவுலின் சோதனைகள்<br>தலைப்பு – மத்திய தரைக்கடல் கப்பல் சேதமடைதல் |
|---|---|---|
| | **வேதப் பகுதி – அப்போஸ்தலர்** *27: 13-14, 20-44; 28: 1-9*<br>**முக்கிய வசனம் –அப்போஸ்தலர்** *27: 25*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நமக்கு உதவி செய்வதாக தேவன் வாக்குறுதி அளிக்கிறார்.<br>2. தேவனுடைய நோக்கங்கமே எப்போதும் நிறைவேறும். | **வேதப் பகுதி –***அப்போஸ்தலர் 27: 1-44; 28: 1-10, 28-31*<br>**முக்கிய வசனம் –***அப்போஸ்தலர் 27: 24-25*<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழ்நிலையும் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது,மேலும் அந்நேரங்களில் நமக்கு உதவுவேன் என்று வாக்குறுதிகள் அளிக்கிறார்.<br>2. சிலர் சுவிசேஷத்தை நிராகரித்தது, மற்றவர்கள் நற்செய்தி கேட்க வாய்ப்பாக அமைந்தது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒரு புயலை அனுபவித்திருக்கிறார்களா என மாணவர்களைக் கேளுங்கள். அப்பொழுதுஅவர்கள் எப்படி உணர்ந்தார்கள், மேலும் தேவன் அவர்களைக் காப்பாற்றவேண்டும் என அவர்கள் ஜெபித்தார்களா என்பதை கண்டறியுங்கள். பவுலின் கப்பல் சேதத்தை விவரிக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கவும், அதில் அவர்களின் அனுபவங்களைத் தொடர்புபடுத்தி காண்பிக்கவும். | மாணவர்களிடம் பயத்தைப் பற்றி கலந்துரையாடுங்கள். அவர்களுக்கு ஏற்பட்ட மோசமான பயங்களை விவரிக்கும்படி அவர்களிடமே கேளுங்கள். பயமான சூழ்நிலைகளில் தேவனுடைய வாக்குறுதிகளின் முக்கியத்துவத்தை கவனியுங்கள். ***(சங்கீதம் 23: 4)*** |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இப்போது ரோம பயணத்தில் இருக்கிறார். குளிர்காலத்தில் அந்தப் பயணத்தை தொடரவேண்டாம் என்று பவுல் அவர்களுக்கு அறிவுரை கூறினார், ஆனால் யாரும் அவர் சொன்னதைக் கேட்கவில்லை.<br>2. அது ஒரு பெரும் புயல், பல நாட்கள் நீடித்தது. ஒருநாள் பவுல் ஒரு தரிசனம் கண்டார், அதில் கப்பலில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கூறப்பட்டது.தான் தேவன்மீது விசுவாசம் கொண்டிருப்பதாகவும் மேலும் தனக்குச் சொல்லப்பட்டபடியே எல்லாம் நடக்கும் என்றும் அவர் கூறினார்.<br>3. இறுதியில் அவர்கள் மால்டாவுக்கு அருகில் வந்தனர், கப்பல் தரைதட்டியதால், அதிலிருந்த 276 பேர் கரையோரமாக பாதுகாப்பாக வெளியேறினார்கள்.<br>4. மால்டாவின் மக்கள் அவரிடம் மிகுந்த தயவுகாட்டினர். பவுல் சில அற்புதங்களை அந்தத் தீவில் செய்தார்.<br>5. *புயலின்போது தேவன் பவுலை எவ்வாறு தைரியப்படுத்தினார் என்பதை வலியுறுத்துங்கள்.*<br>6. *கிறிஸ்துவர்கள் துன்பத்திற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை வலியுறுத்துங்கள்.*<br>7. *நாம் வாழ்க்கையின் புயல்களின் வழியாக செல்லும்போது எவ்வாறு கர்த்தருடைய பிரசன்னத்தையும் வல்லமையும் அறிந்துகொள்ளலாம் என்பதை கவனியுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – பவுல் கப்பல் விபத்தில்(I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பவுல் இப்போது ரோம பயணத்தில் இருக்கிறார்.குளிர்காலத்தில் அந்தப் பயணத்தை தொடரவேண்டாம் என்று பவுல் அவர்களுக்கு அறிவுரை கூறினார், ஆனால் யாரும் அவர் சொன்னதைக் கேட்கவில்லை.<br>2. அது ஒரு பெரும் புயல், பல நாட்கள் நீடித்தது. பயணம்செய்தவர்களுக்கு தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையே இருக்கவில்லை.<br>3. ஒருநாள் பவுல் ஒரு தரிசனம் கண்டார், அதில் கப்பலில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கூறப்பட்டது.தான் தேவன்மீது விசுவாசம் கொண்டிருப்பதாகவும் மேலும் தனக்குச் சொல்லப்பட்டபடியே எல்லாம் நடக்கும் என்றும் அவர் கூறினார். 14 நாட்கள் அவர்கள் ஒன்றும் சாப்பிடமல் இருந்தனர், சாப்பிடும்படி பவுல் அவர்களை தைரியப்படுத்தினார், சீக்கிரத்தில் அவர்கள் கரையை நெருங்கினர்.<br>4. இறுதியில் அவர்கள் மால்டாவுக்கு அருகில் வந்தனர், கப்பல் தரைதட்டியதால், அதிலிருந்த 276 பேர் கரையோரமாக பாதுகாப்பாக வெளியேறினார்கள்.<br>5. மால்டாவின் மக்கள் அவரிடம் மிகுந்த தயவுகாட்டினர். பவுல் சில அற்புதங்களை அந்தத் தீவில் செய்தார்.<br>6. இறுதியில் அவர்கள் ரோமை அடைந்தனர், பவுல் வீட்டுக்காவலில் இருந்தார், ஆனால் இயேசு கிறிஸ்துவைக் குறித்து மக்களுக்கு அறிவிக்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார்.<br>7. *புயலின்போது தேவன் பவுலை எவ்வாறு தைரியப்படுத்தினார் என்பதை வலியுறுத்துங்கள்.*<br>8. *கிறிஸ்துவர்கள் துன்பத்திற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை வலியுறுத்துங்கள்.*<br>9. *நாம் வாழ்க்கையின் புயல்களின் வழியாக செல்லும்போது எவ்வாறு கர்த்தருடைய பிரசன்னத்தையும் வல்லமையும் அறிந்துகொள்ளலாம் என்பதை கவனியுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பவுல் கப்பல் விபத்தில்(I)** |
| **மீள்பார்வை** | மாணவர்கள் தங்களை பவுலாக கற்பனை செய்யும்படி கூறுங்கள். ரோமிற்கு செல்லும் வழியில் ஒரு புயல் மூலம் தேவன் அவர்களை எவ்வாறு கொண்டு வந்தார் என்றஅனுபவத்தை, பிரச்சினையை அனுபவிக்கும் ஒரு நண்பருடைய பிரச்சினையோடு சம்பந்தப்படுத்திக் காட்டி, அந்த நண்பரை ஊக்குவிக்கும் வகையில் ஒரு கடிதத்தை எழுதச் சொல்லுங்கள். | ***2 கொரிந்தியர்*** *11: 21-33* மற்றும் ***2 தீமோத்தேயு*** *4: 16-18*ஐ வாசியுங்கள். இந்த இரண்டு பகுதிகள் ஒன்றோடொன்று எப்படித் தொடர்புடையதாக இருக்கிறது என்பதை மாணவர்களோடு கலந்தாலோசியுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. பவுலின் கப்பற்சேத சம்பவம் எவ்வாறு சவாலாகவும் நம்மை ஊக்குவிக்கிறதாகவும் இருக்கிறது என்பதைக் கேளுங்கள்.<br>2. பைபிளின் மற்ற கதைகளில் கடினமான நேரங்களில் தேவன் விடுவித்தார் எ.கா. யோசேப்பு, தானியேல் முதலியோர். இதிலிருந்து நாம் என்னப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?<br>3. நமது வாழ்வில் தேவனுடைய ஆளுகைக்காக அவருக்கு நன்றி செலுத்துவதற்கான ஜெபத்தை எழுதுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. பவுலின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் குறித்துப் படித்ததைச் சிந்தித்துப் பாருங்கள், மேலும் தேவன் உண்மையுள்ளவர் என்பது அவரது வாழ்க்கையில் எப்படி பிரகாசிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.<br>2. 'விடாமுயற்சி' என்ற வார்த்தையின் அர்த்தத்தை அகராதியில் பாருங்கள். இது பவுலின் வாழ்க்கையில் எப்படிக் காணப்படுகிறது? இந்த விஷயத்தில் மாணவர்கள் எப்படி பவுலுடன் தங்களை ஒப்பிட முடியும் என்பதை சவாலாக வையுங்கள். |

| | A12 - நிலை 3<br>பாடம் 1 - முதல் கிறிஸ்துமஸ்<br>தலைப்பு - அசாத்தியமானது! | A12 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - இரட்சகரின் பிறப்பு<br>தலைப்பு - தேவதூதனின் செய்திகள் |
|---|---|---|
| | **வேதப் பகுதி - *லூக்கா 1: 5-20, 57-66***<br>**முக்கிய வசனம் -*லூக்கா 1: 37***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. சகரியாவும் எலிசபெத்தும் ஒரு முதிய தம்பதியராய் இருந்தனர். அவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதிலளித்தை அனுபவத்தில் அறிந்தனர்.<br>2. தேவனுக்கு எதுவும் அசாத்தியமில்லை. | **வேதப் பகுதி -*மத்தேயு 1: 18-25 & லூக்கா 1: 26-38***<br>**முக்கிய வசனம் -*மத்தேயு 1: 21***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசுவின் பிறப்பு துல்லியமாக முன்னுரைக்கப்பட்டது, அவரது வாழ்க்கையைப் பற்றிய முக்கிய விவரங்கள் அவருக்குத் தந்தையாய் இருக்கப்போகிறவருக்கு உரைக்கப்பட்டது.<br>2. பரிசுத்த ஆவியால் மரியாள் கருத்தரிப்பாள் என அவளுக்கு சொல்லப்பட்டது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | சில நேரங்களில் தங்கள் ஜெபங்களுக்கு பதிலளிப்பதைக் காண மக்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறதைப் பற்றி பேசுங்கள். சகரியா மற்றும் எலிசபெத்தின் சூழ்நிலையை விளக்குங்கள். சாத்தியமற்றதாக தோன்றியபோதிலும், அவர்கள் ஜெபத்திற்கு பதில் கிடைக்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்தது, | பெரிய நிகழ்வுகள் பெரும்பாலும் சம்பவித்த உடனேயே உலகம் முழுவதும் உடனுக்குடன் செய்தியாக பரப்பப்படும் வழிகளைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.<br>இருப்பினும் எந்த நிகழ்வையும் அது நடக்கும் முன்பே யாரும் முன்னறிவிக்க முடியாது. ஆனால் தேவனால் முடியும்!<br>கர்த்தராகிய இயேசு பிறப்பதற்கு முன்பே, யோசேப்பும் மரியாளும் தேவனிடமிருந்து செய்திகளைப் பெற்றிருந்தார்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. சகரியாவும் எலிசபெத்தும் குழந்தைகளுக்காக வாஞ்சையாய் இருந்தார்கள்என்பதை விளக்குங்கள். ஒருவருக்கு குழந்தை இல்லை என்றால், பைபிள் காலங்களில் மத்திய கிழக்கில் தம்பதிகள் அனுபவித்த அவமானம் மற்றும் வேதனையை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.<br>2. தேவாலயத்தில் ஆசாரியனாக ஊழியம் செய்யும் பாக்கியம் சகரியாவுக்கு கிடைத்தது.<br>3. ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்றியபோது, சகரியா பயந்தார். எலிசபெத் ஒரு மகனைப் பெறுவாள், அவன் கர்த்தருடைய பார்வையில் பெரியவனாயிருப்பான், கர்த்தருக்கென்று ஒரு ஜனத்தை ஆயத்தம்பண்ணுவான் என்று தேவதூதன் கூறுகிறான்.***(லூக்கா 1: 17)***<br>4. பிள்ளைகளைப் பெறமுடியாத அளவுக்கு தாங்கள் மிகவும் வயதானவர்கள் என்று சகரியா தேவதூதனிடம் சொல்கிறார். அவர் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்காததால் அது நடக்கும் வரை சகரியா பேச முடியாமல் இருப்பார் என தேவதூதன் கூறினான்.<br>5. குழந்தை பிறந்தபோது, எலிசபெத் அதனை யோவான் என்று அழைக்க வேண்டும் என்று கூறினார், சகரியாவும் எழுதிக் காண்பித்து அதை உறுதிப்படுத்தினார்.அவர் அவ்வாறு செய்தவுடனேயே, அவரால் பேசவும், பரிசுத்த ஆவியினால் நிரம்பவும், யோவான் செய்யப்போகும் அனைத்தையும் தீர்க்கதரிசனம் உரைக்கவும் முடிந்தது.<br>6. *அண்டை வீட்டாரின் பதிலைக் கருத்தில் கொள்க. (1: 65-66)*<br>7. *தேவதூதனின் செய்திக்கு சகரியாவின் பதிலையும் எலிசபெத்தின் பதிலையும் வேறுபடுத்திக் காண்க.இதிலிருந்து என்ன கற்றுக் கொள்ளலாம்?*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI - யோவான் ஸ்நாபகனுடைய பிறப்பு (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. மரியாளும் யோசேப்பும் திருமணம் செய்கொள்வதற்காக நிச்சயம்செய்யப்பட்டனர்.பிறகு மரியாள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் கர்ப்பந்தரித்து ஒரு மகனைப் பெறுவாள் என்ற செய்தியை தேவதூதனிடமிருந்து கேட்கிறாள்.<br>2. யோசேப்பு இதைக் கேட்டவுடன், அவளை அமைதியான முறையில் விவாகரத்து செய்ய விரும்புகிறார். எனினும் குழந்தையின் பிறப்பு, அவர் பிறக்கும் காரணம், மேலும் அவரது பிறப்பில் நிறைவேறும் தீர்க்கதரிசனம் பற்றி ஒரு கனவில் யோசேப்புக்குக் கூறப்பட்டது.<br>3. யோசேப்பும் மரியாளும் அவர்கள் பெற்ற செய்தியை நம்பினர். யோசேப்பு குழந்தைக்கு இயேசு என்ற பெயரைக் கொடுத்தார், ஏனெனில் "அவர் தமது ஜனங்களை அவர்களது பாவங்களிலிருந்து இரட்சிப்பார்".<br>4. *மூன்று கேள்விகளைக் கவனியுங்கள்:*<br>*அ) சாதாரண வழியில் இல்லாமல் இயேசு ஏன் பரிசுத்த ஆவியால் அற்புதமாக உற்பவித்தார்?*<br>*ஆ) மரியாளும் யோசேப்பும் அவருடைய பூமிக்குரிய பெற்றோர்களாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? (அவர்களின் முன்னோர்கள் பட்டியலை பாருங்கள் - மத்தேயு 1 மற்றும் லூக்கா 3)*<br>*இ) இந்த உலகத்தில் தம் ஒரே மகனை அனுப்புவதை ஏன் தேவன் தேர்ந்தெடுத்தார்?*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 1ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசுவின் பிறப்பு (I)** |
| **மீள்பார்வை** | "அசாத்தியமானது சாத்தியம் ஆனது" என்ற தலைப்பின் கீழ், சாத்தியமற்றது என்று நினைத்தாலும் சாத்தியமான உண்மைச் சம்பவங்களை (குறிப்பாக பைபிளின் உதாரணங்கள்) மாணவர்கள் எழுதட்டும். அதற்குக் கீழே: தேவனுக்கு நன்றி! என்று எழுதவும். | இன்றைய ஆய்வில் இருந்து நீங்கள் எதனை எடுத்து உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தலாம்?<br>கர்த்தராகிய இயேசுவின் வருகை நமக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது?<br>தேவன் தமது குமாரனை அனுப்பிவைக்க மேற்கொண்ட எல்லாக் காரியத்திற்காகவும் அவருக்கு நன்றி தெரிவிக்கும் ஜெபங்களை ஏறெடுங்கள். ***2 கொரிந்தியர் 9: 15*** |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இந்த ஆய்வின் விளைவாக என்னக் கற்றுக்கொண்டீர்கள்?<br>2. இன்று தேவதூதர்கள் எப்போதாவது தோன்றுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன்? ஏன் இல்லை? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. விசுவாசிப்பதற்கும் நம்புவதற்கும் கடினமாக இருந்த ஒன்றை தேவன் எப்பொழுதாவது உங்களிடமோ அல்லது வேறு யாரிடமாவது சொல்லியிருக்கிறாரா?<br>2. இந்த ஆய்விற்கான பைபிளில் வாசிப்புகளில் வாசிக்கப்பட்ட எந்தத் தீர்க்கதரிசனங்கள் கர்த்தராகிய இயேசு வந்தபோது நிறைவேறின? |

| | A12 – **நிலை 3**<br>**பாடம் 2 – முதல் கிறிஸ்துமஸ்**<br>**தலைப்பு – விசேஷமான பணி** | A12 – **நிலை 4**<br>**ஆராய்ச்சி 2 – இரட்சகரின் பிறப்பு**<br>**தலைப்பு – பேரரசரின் கட்டளை** |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *லூக்கா 1: 26-38***<br>**முக்கிய வசனம் –*லூக்கா 1: 38***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. மரியாளும் யோசேப்பும் தேவன்குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்திய தம்பதியர் ஆவர்.<br>2. தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் பிறப்பு ஒரு அதிசயமாகும். | **வேதப் பகுதி –*லூக்கா 2: 1-7***<br>**முக்கிய வசனம் –*லூக்கா 2: 7***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ரோம சாம்ராஜ்யத்தை ஆட்சிசெய்தவர்கள் சீஸர்கள் என்றழைக்கப்பட்டனர்.<br>2. சீசர் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். அதன்படிமரியாளும் யோசேப்பும் பதிவுசெய்வதற்காக பெத்லகேமுக்குச் செல்ல வேண்டியிருந்தது.இது பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒரு குழந்தை பிறக்கும்போது செய்ய வேண்டிய முதல் காரியங்களில் ஒன்று அந்தக் குழந்தைக்கு ஒரு பெயரைச் சூட்டுவதாகும் என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.<br>இயேசுவுக்குப் பல பெயர்கள் அல்லது குணாதிசயப் பெயர்கள் உள்ளன.<br>***லூக்கா 1 மற்றும் 2***, மற்றும் ***மத்தேயு 1 மற்றும் 2*** ஆகியவற்றில் இயேசுவின் பிறப்பு விவரங்களைப் பற்றிய கண்ணோட்டத்துக்குப் பிறகு, அவருடைய பெயர்கள் மற்றும் குணாதிசயப் பெயர்கள் சிலவற்றையும் பட்டியலிடுங்கள். அதில் உங்களுக்குச் சிறந்ததாய் காணப்படுவது எது, ஏன்? | ஒரு குழந்தை பிறக்கும்போது செய்ய வேண்டிய முதல் காரியங்களில் ஒன்று அந்தக் குழந்தைக்கு ஒரு பெயரைச் சூட்டுவதாகும் என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். இயேசுவுக்குப் பல பெயர்கள் அல்லது குணாதிசயப் பெயர்கள் உள்ளன. ***லூக்கா 1 மற்றும் 2***, மற்றும் ***மத்தேயு 1 மற்றும் 2***ஆகியவற்றில் இயேசுவின் பிறப்பு விவரங்களைப் பற்றிய கண்ணோட்டத்துக்குப் பிறகு, அவருடைய பெயர்கள் மற்றும் குணாதிசயப் பெயர்கள் சிலவற்றையும் பட்டியலிடுங்கள். அதில் உங்களுக்குச் சிறந்ததாய் காணப்படுவது எது, ஏன்? சிறு குழுக்களில் நீங்கள் பைபிளை வாசிக்கும்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல இடங்களின் பெயர்களை இயன்ற வரை எழுதுங்கள். நபர்களின் பெயர்களையும் அவ்வாறே எழுதுங்கள். பைபிளை வாசிக்கும் நேரத்தில் மீண்டும் வாசித்து உங்கள் பதில்களைச் சரிபார்க்கவும். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. மரியாள் அநேகமாக பருவ வயதுள்ளவளாய் இருந்தபோது யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்டாள்.<br>2. அவளிடம் காபிரியேல் தேவதூதன் வந்து, தேவனால் அதிக பாக்கியத்தைப் பெற்றவள் எனக் கூறியபோது அவள் கலக்கமடைகிறாள்.<br>3. இயேசு என்று பெயரிடப்படும் குழந்தையை அவள் பெற்றெடுக்க வேண்டும் என்று தேவதூதன் அவளிடம் சொல்கிறான். அவர் உன்னதமானவருடைய குமாரன், தனது மூதாதையர் தாவீதின் சிம்மாசனத்தில் இருப்பார்.<br>4. அவள் இன்னமும் கன்னிகையாக இருந்ததால் மரியாள் குழப்பமடைந்தாள், ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவள் கருவுறுவாள் என்று தேவதூதன் விளக்குகிறான்.<br>5. மரியாளின் பதில் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது, அவள் கூறுகிறாள், “எனக்கு நீங்கள் கூறியது போலவே ஆகட்டும்“ என்று.<br>6. *அவள் தேவனால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள், அவள் கர்ப்பவதி ஆகப்போகிறாள் என்று தேவதூதன் சொன்னபோது மரியாளின் இருதயத்தில் எப்படிப்பட்ட எண்ணங்கள் ஓடியிருக்கக் கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதை சிந்தித்துப்பாருங்கள். **வசனங்கள் 46 & 47**யும் பாருங்கள்.*<br>7. *“தேவனுக்கு அசாத்தியமாக ஒன்றுமில்லை.” மனிதருக்கு அசாத்தியமான சூழ்நிலைகளில் பிறந்த பைபிளிலுள்ளவேறுகுழந்தைகளைப் பற்றி யோசித்துப்பாருங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். 2ம் பாடத்தைமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – இயேசுவின் பிறப்பு (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. மரியாளும் யோசேப்பும் ராஜாவாகிய தாவீதின் சந்ததியாராக இருந்தனர். ஆகையால் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு கட்டளை பிறந்தபோது அவர்கள் பெத்லகேம் சென்றனர்.<br>2. இது குறைந்தபட்சம் 70 மைல் தூரத்திலிருந்தது, மேலும் பிள்ளையின் பிறப்பை எதிர்நோக்கியிருந்த மரியாளுக்கு அது மிகவும் கடினமான பயணமாக இருந்தது. பெத்லகேம் மிகவும் நெரிசலானது, அதனால் அவர்கள் அநேகமாக ஒருவிதமான தொழுவத்திலோ அல்லது குகையிலோ தங்கவேண்டியிருந்ததாக தோன்றுகிறது.<br>3. இங்கே இயேசு மிகவும் தாழ்மையான மோசமான சூழ்நிலையில் பிறந்தார்.<br>4. மீகா சொன்னதைப்போல இயேசு பெத்லகேமில் பிறக்க வேண்டுமென்பதற்காக நடக்க வேண்டியிருந்த காரியங்களை எண்ணிப் பாருங்கள், மேலும்<br>இவை அனைத்தையும் உண்மையில் நிறைவேறச் செய்த தேவனின் வல்லமையைக் கண்டு ஆச்சரியப்படுங்கள். ***(மீகா 5: 2)***<br>5. ***யோவான் 3: 16***ஐயும் ***கலாத்தியர் 4: 4***ஐயும் வாசிக்கவும். எல்லோரும் இந்த பெரிய நிகழ்வை புரிந்துகொள்ள உதவுவதற்காகஇந்த வசனங்களின் அர்த்தத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 2ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – இயேசுவின் பிறப்பு (I)** |
| **மீள்பார்வை** | இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:<br>1. அந்த தேவதூதனின் பெயர் என்ன?<br>2. செய்திக்கு மரியாள் முதலில் எவ்வாறு பதிலளித்தாள்?<br>3. சிறிது நேரம் கழித்து அவள் எப்படி உணர்ந்தாள்?*(46 & 47* வசனங்களைக் காண்க) | இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:<br>1. நீங்கள் வசிக்கும் இடத்திலிருந்து 70 மைல் தொலைவில் இருக்கும் ஒரு நகரம் அல்லது பட்டணத்தின் பெயரைக் குறிப்பிடுங்கள்.<br>2. நிறைமாத கர்ப்பமாக இல்லாத சூழ்நிலையில் கூட, மாணவர்கள் எப்படி அவ்வளவு தூரம் சாதாரணமாக நடபயில முடியும்?<br>3. நவீன கால குழந்தைகளின் பிறப்போடு ஒப்பிடுகையில் இயேசு பிறந்த சூழ்நிலை எவ்வாறு வித்தியாசமானது? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>சிறு குழுக்களாகப் பிரிந்து இந்த பைபிள் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களின் பெயரையும் எழுதுங்கள். பின்னர் மனிதருடைய பெயர்களையும் எழுதுங்கள். பத்தியினை மீண்டும் வாசிப்பதன் மூலம் நீங்கள் எதையாவது விட்டுவிட்டார்களா என்பதைச் சரிபார்க்கவும். எழுதப்பட்ட எல்லாவற்றின் முக்கியத்துவத்தையும் பற்றி யோசித்துப் பாருங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>“முன்னணையில் கிடத்தியிருந்த எங்கள் குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு முன்பு நிறைமாத கர்ப்பிணியான மரியாள் 70 மைல் தூரம் பயணம் செய்தாள்” என்ற தலைப்பில் யோசேப்பு எழுதுவதைப் போல ஒரு கட்டுரையை எழுதுங்கள். |

| | A12 – நிலை 3<br>பாடம் 3 – முதல் கிறிஸ்துமஸ்<br>தலைப்பு – பெத்லகேமில் | A12 – நிலை 4<br>ஆராய்ச்சி 3 – இரட்சகரின் பிறப்பு<br>தலைப்பு – மேய்ப்பர்களின் வருகை |
|---|---|---|
| | **வேதப் பகுதி – *லூக்கா 2: 1-20***<br>**முக்கிய வசனம் –*லூக்கா 2: 11***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு ஏழ்மையிலும் கடினமான சூழ்நிலையிலும் பிறக்க வேண்டுமென்பது தேவனின் திட்டமாய் இருந்தது.<br>2. நடந்தது அனைத்தையும் தேவன் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார், இன்றும் அவ்வாறே வைத்திருக்கிறார். | **வேதப் பகுதி –*லூக்கா 2: 8-20***<br>**முக்கிய வசனம் –*லூக்கா 2: 11***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. மேய்ப்பர்களிடம் தங்கள் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களுக்கு தேவதூதர்கள் தோன்றினார்கள்.<br>2. அவர்கள் கேட்டவைகளை விசுவாசித்து உடனடியாக செயல்பட்டனர். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | வரலாற்றின் மிகப்பெரிய நிகழ்வுகளில் சிலவற்றைக் குறிப்பிடுமாறு மாணவர்களைக் கேளுங்கள். தேவனுடைய குமாரனின் வருகை ஒரு முக்கிய சம்பவம் என்பதை விளக்குங்கள்.இந்தப் பத்தியில் வரும் அனைத்து நிகழ்வுகளையும் காட்டும் காலக்கிரமத்தை வரைபடமாக வரையவும். | சிறிய குழுக்களில் இதனை நாடகமாக நடித்துக் காட்டுங்கள். சில எளிய சிறு துண்டுகளை மேய்ப்பரின் தலைப்பாகையாகப் பயன்படுத்துங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. மரியாளும் யோசேப்பும் ராஜாவாகிய தாவீதின் சந்ததியாராக இருந்தனர். ஆகையால் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு கட்டளை பிறந்தபோது அவர்கள் பெத்லகேம் சென்றனர்.<br>2. இது குறைந்தபட்சம் 70 மைல் தூரத்திலிருந்தது, மேலும் பிள்ளையின் பிறப்பை எதிர்நோக்கியிருந்த மரியாளுக்கு அது மிகவும் கடினமான பயணமாக இருந்தது.<br>3. பெத்லகேம் மிகவும் நெரிசலானது, அதனால் அவர்கள் அநேகமாக ஒருவிதமான தொழுவத்திலோ அல்லது குகையிலோ தங்கவேண்டியிருந்ததாக தோன்றுகிறது. இங்கே இயேசு மிகவும் தாழ்மையான மோசமான சூழ்நிலையில் பிறந்தார்.<br>4. பிறப்பு இரவு நேரத்தில் சம்பவித்தது என்றும், விழித்திருந்த மிகச் சில மக்களில் சிலர் மேய்ப்பர்கள் என்றும் கருதுகிறோம்.<br>5. அவர்கள் இரட்சகராகிய கர்த்தராகிய கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய செய்தியைப் பெற்றார்கள்.<br>6. தேவனைத் துதிக்கும் ஒரு பெரிய பரலோக சேனையின் கூட்டம் மேய்ப்பர்களுக்கு தோன்றியது.<br>7. மேய்ப்பர்கள் பெத்லகேமுக்குப் போய் என்ன நடந்தது என்று பார்க்க முடிவெடுத்தனர்.அவர்கள் மரியாளையும் யோசேப்பையும் குழந்தையையும் கண்டனர்.<br>8. அவர்கள் தாங்கள் கண்ட எல்லாவற்றின் செய்தியையும் பரப்பினார்கள், பிறகு தேவனைத் துதித்து மகிமைப்படுத்தினார்கள்.<br>9. *தேவதூதர்கள் முதலாவதாக வாழ்த்துகிறதை இங்கேயும் பிற இடங்களிலும் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*<br>10. *இளம் தம்பதிகள் தங்கள் பயணத்தில் எப்படி உணர்ந்தார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.*<br>11. *மேய்ப்பர்களின் கதையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களைக் குறித்து கலந்துபேசுங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**3ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – மேய்ப்பர்கள் இயேசுவின் பிறப்பைக் குறித்து கேள்விப்படுகிறார்கள் (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. பிறப்பு இரவு நேரத்தில் சம்பவித்தது என்றும், விழித்திருந்த மிகச் சில மக்களில் சிலர் மேய்ப்பர்கள் என்றும் கருதுகிறோம்.<br>2. அவர்கள் இரட்சகராகிய கர்த்தராகிய கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய செய்தியைப் பெற்றார்கள்.<br>3. தேவனைத் துதிக்கும் ஒரு பெரிய பரலோக சேனையின் கூட்டம் மேய்ப்பர்களுக்கு தோன்றியது.<br>4. மேய்ப்பர்கள் பெத்லகேமுக்குப் போய் என்ன நடந்தது என்று பார்க்க முடிவெடுத்தனர். அவர்கள் மரியாளையும் யோசேப்பையும் குழந்தையையும் தங்களுக்குச் சொல்லப்பட்டதைப் போலவே கண்டனர்.<br>5. அவர்கள் கண்ட எல்லாவற்றின் செய்தியையும் பரப்பினார்கள், பிறகு தேவனைத் துதித்து மகிமைப்படுத்தினார்கள்.<br>6. *இந்த மக்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது தேவதூதர் மூலமாக தேவன் தோன்றினார் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள். இன்றும் நமது அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும்போது நம்மிடம் அவரால் பேசமுடியும்.*<br>7. தேவன் நமக்குச் செய்ததைப் பற்றி நாம் கேள்விப்பட்டால் அதை நாம் மற்றவர்களிடம் சொல்ல வேண்டும்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**ஆராய்ச்சி 3ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – மேய்ப்பர்கள் இயேசுவின் பிறப்பைக் குறித்து கேள்விப்படுகிறார்கள் (I)** |
| **மீள்பார்வை** | இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:<br>1. ***வசனம் 10***ல் காணப்படுவதைப்போல் தேவதூதர்கள் ஏன் மக்களை வாழ்த்துகிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>2. மேய்ப்பர்கள் போன்ற சாதாரண மக்களோடு தேவன் தேவதூதர்கள் மூலமாக இன்றும் பேசுவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?ஏன்? ஏன் இல்லை?<br>3. மரியாளின் மனதில் என்ன இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ***(வசனம் 19)*** | இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:<br>1. தேவதூதன் அவர்களை விட்டு போனவுடனேயே மேய்ப்பர்கள் ஏன் அவ்வாறு செயல்பட்டனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>2. மேய்ப்பர்கள் துரிதமாக செயல்பட்டதால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.நீங்கள்*20* ***ஆம் வசனத்தை*** நவீன கால பாணியில் எழுத முடியுமா?<br>3. மரியாளின் மனதில் என்ன இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ***(வசனம் 19)*** |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>நீங்கள் மேய்ப்பராக நடியுங்கள். *8-17* ***வசனங்களைப்*** பயன்படுத்தி நீங்கள் கேட்டவற்றை, பார்த்தவற்றை, உணர்ந்தவற்றை விவரிக்கும் டயரி குறிப்பை எழுதுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>தேவன் உங்களிடத்தில் என்ன சொல்கிறாரோ அதை தேதியிட்டு எழுதிவையுங்கள். நீங்கள் திருப்பிப் பார்த்தால் தேவன் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்கிறார் என்பதை அறிந்து ஊக்கமடைய முடியும். |

| | A12 – நிலை 3<br>பாடம் 4- முதல் கிறிஸ்துமஸ்<br>தலைப்பு – ஆலயத்தில் | கி12 – நிலை 4<br>ஆராய்ச்சி 4 – இரட்சகரின் பிறப்பு<br>தலைப்பு – ஞானவான்களின் பரிசு |
|---|---|---|
| | **வேதப் பகுதி –** ***லூக்கா 2: 22-40***<br>**முக்கிய வசனம் –*லூக்கா 2: 30***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. சிமியோன் மற்றும் அன்னாள் இயேசுவின் பிறப்பின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டிருந்ததால் அவர்கள் அதைக் குறித்து சந்தோஷப்பட்டார்கள்.<br>2. இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பியதற்காக நாம் தேவனுக்கு நன்றிசெலுத்துவது முக்கியம். | **வேதப் பகுதி –*மத்தேயு 2: 1-23***<br>**முக்கிய வசனம் –*மத்தேயு 2: 11***<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஞானவான்கள் பொக்கிஷங்களை இயேசுக்கு கொண்டுவந்தார்கள், என்றாலும் உண்மையான பொக்கிஷம் இயேசுவே.<br>2. இயேசு மிகவும் விசேஷமானவர் என்று அவர்கள் அறிந்தார்கள். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பிள்ளைக்குப் பெயர்வைக்கவும், விருத்தசேதனம் பண்ணவும், தாயின் சுத்திகரிப்புக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தவும் பெற்றோர்கள் தேவாலயத்துக்குச் செல்ல வேண்டுமென யூத சட்டம் வலியுறுத்தியது என்பதை விளக்குங்கள். ***(லேவியராகமம் 15)*** | புதிய குழந்தையைப் பார்க்க குடும்ப நண்பர்கள் பயணம்செய்து வருவதைப்பற்றி யோசியுங்கள். ஞானிகளையும் அவர்கள் மேற்கொண்ட நீண்ட பயணத்தையும் அறிமுகப்படுத்துங்கள். இந்தக் கதையில் தேவன் எப்போதுமே சாத்தானுக்கு மேலே ஒரு படி இருக்கிறாரென்பதை யோசித்துப்பாருங்கள். அதற்கான உதாரணங்களை இந்த வேதப்பகுதிலிருந்து பட்டியலிடுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. இயேசு பிறந்த பிறகு அவர் எருசலேமிலிருந்த தேவாலயத்திற்கு கொண்டுசெல்லப்படுகிறார்.<br>2. மரியாளும் யோசேப்பும் குழந்தைக்கு இயேசு என்று பெயரிட வேண்டும் என சொல்லப்பட்டிருந்தார்கள், அதைத்தான் அவர்கள் செய்தார்கள்! நியாயப்பிரமாணம் அவர்களுக்குப் போதித்தபடியே அவர்கள் காணிக்கை செலுத்தினார்கள்.<br>3. அவர்கள் சிமியோனைச் சந்தித்தார்கள், "கர்த்தருடைய கிறிஸ்துவை" காணும் வரையில் அவர் மரிக்கமாட்டார் என்று அவருக்குச் சொல்லப்பட்டிருந்தது.<br>4. அவர் தனது கைகளில் குழந்தையை எடுத்து, இயேசுவை இரட்சகர் என்று அறிந்ததால் தேவனைத் துதித்தார்.<br>5. அவர்கள் அன்னாள் என்ற ஒரு வயதான பெண்மணியை சந்தித்தார்கள், அவர் தேவனுக்கு நன்றி செலுத்தி, 'எருசலேமின் மீட்பை எதிர்பார்த்துக் காத்திருந்த அனைவருக்கும் அக்குழந்தையைப் பற்றிக் கூறினார்.'<br>6. *இயேசு மிகவும் விசேஷமானவர் என்று சிமியோனும் அன்னாளும் அறிந்திருந்ததைக் கவனியுங்கள்.*<br>7. *இயேசுவுக்கு சம்பவிக்கும் என்று அவர்கள் சொன்ன விஷயங்களைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள்.* ***(31-32, 34, 35, 38 வசனங்களைக் காண்க)***<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**4ம் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:FBI – சிமியோன் மற்றும் அன்னாள் குழந்தை இயேசுவைச் சந்திக்கிறார்கள். (I)** | **பைபிள்கதையைக்கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஞானிகள் கிழக்கில் ஒரு நட்சத்திரத்தைக் கண்டனர், தங்கள் ஆய்வுகளிலிருந்து ஒரு புதிய ராஜா பிறந்திருப்பதாக முடிவுசெய்தனர், மேலும் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என அவர்கள் விரும்பினர்.<br>2. அவர்கள் எருசலேம் அரண்மனையில் இருந்த ஏரோதிடம் வந்தனர், ஏனெனில் புதிய ராஜா அங்குதான் பிறந்திருப்பார் என்று எண்ணினர்.<br>3. தனக்கு ஒரு எதிராளி தோன்றிவிட்டதாக ஏரோது நினைத்து கலக்கமடைந்தான், ***மீகா 5: 2***ன்படி ராஜா பெத்லகேமில்தான் பிறப்பார் என மதத் தலைவர்கள் மூலமாக அறிந்துகொண்டான்.<br>4. ஞானிகள் பெத்லகேமுக்குச் செல்கிறார்கள், அங்கே குழந்தையைக் கண்டு அவருக்கு தங்களது பொக்கிஷங்களை அளித்து அவரைப் பணிந்துகொள்கிறார்கள்.<br>5. வீட்டிற்கு வேறு வழியாகச் செல்லவேண்டும் எனவும் தாங்கள் கண்டதை ஏரோதுக்குச் சொல்லக்கூடாது எனவும் ஒரு கனவில் அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.<br>6. மரியாளையும் குழந்தையையும் பாதுகாப்புக்காக எகிப்திற்குக் கொண்டுசெல்ல வேண்டும் என யோசேப்புக்கு சொல்லப்பட்டது.<br>7. தான் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்ந்த ஏரோது, பெத்லகேமில் இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் மரண தண்டனை விதிக்கிறான்.<br>8. சிறிது காலம் கழிந்த பின்பு, இப்போது திரும்ப நாசரேத்துக்குப் போய் அங்கே வசிப்பது பாதுகாப்பானது என யோசேப்புக்கு அறிவிக்கப்பட்டது.<br>9. *நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே பல தீர்க்கதரிசனங்கள் மூலமாக தேவன் இதை எப்படித் திட்டமிட்டார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.* ***(5-6, 15, 17-18, 23 வசனங்களைக் காண்க)***<br>10. *ஏரோது எப்படி சாத்தானின் வேலையைச் செய்தான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.*<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். ஆராய்ச்சி 4ஐமுடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI –ஞானிகள் இயேசுவை சந்தித்து ஆராதனை செய்கின்றனர். (I)** |
| **மீள்பார்வை** | அவர் ஒரு ஒளியாக இருப்பார் என்று சிமியோன் கூறினார்.சிறிய குழுக்களில் / இருவர் இருவராக சேர்ந்து ஒளியினால் விளையும் எல்லா சாதகமான காரியங்களையும் குறித்து யோசிக்கவும். இப்போது என்ன வழிகளில் அவர்கள்***32ஆம் வசனத்தை*** சற்று வித்தியாசமாக பார்க்கலாம்? தேவன் தங்களுடைய வாழ்க்கையில் இன்னும் அதிக ஒளியை அனுப்ப வேண்டும் என்று ஜெபிக்கும்படி மாணவர்களுக்கு அழைப்பு கொடுங்கள். அவர்களுக்கு உதவி தேவைப்படும் குறிப்பிட்ட பகுதிகள் பற்றி சிந்திக்கும்படி கூறுங்கள், அவர்கள் அதை ஒரு ஜெபமாக மாற்ற ஊக்குவியுங்கள். | இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகளைக் கவனியுங்கள்.<br>பொன் அவர் ஒரு இராஜா என்பதையும், வெள்ளைப்போளம் அவர் ஒரு துன்பப்பட்டு மரிக்கும் இரட்சகர் என்பதையும், தூபவர்க்கம் அவர் நாம் வணங்கும் தேவன் என்பதையும் குறிக்கின்றன.<br>இயேசுவை இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்பவர்களுக்கு எல்லா வகையிலும் அவர் ஒரு இலவச பரிசாக, பொக்கிஷமாக இருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. இந்தப் பாடத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொண்டு நம் வாழ்க்கையில் அதைக் கடைபிடிக்கலாம்?<br>2. இரட்சிப்பு என்பது முழுமையானது, அது ஒரேயடியாக நிகழ்வது அல்ல, ஆனால் அது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு நீண்ட செயல்முறையாகும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால்:**<br>1. நாம் கர்த்தராகிய இயேசுவுக்குக் காணிக்கையாக எதைக் கொண்டுவரலாம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.<br>2. சாத்தான் 'வஞ்சகனாக' செயல்படும் சில அன்றாட உதாரணங்கள் / நிகழ்வுகளை பட்டியலிடுங்கள். அவன் செயல்படும் விதத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். |

## ஆசிரியர்கள் பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதற்கானவழிமுறைகள்

**நிலை 3 பாடங்கள்**

- மாணவர்கள் பைபிளை பார்க்காமல் இந்தப் பாடங்களை முடிக்க முடியாது, சில நேரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேதப்பகுதிகளை பார்க்கவேண்டியதாகும்.
- குறுக்குநெடுக்கு வார்த்தைகள், வார்த்தை கட்டங்கள், விடுபட்ட வார்த்தைகள் போன்று பலதரப்பட்ட கேள்விகள் உண்டு.
- பல வகையான பைபிளை பயன்படுத்தி பதிலெழுதும் வகையில் கேள்விகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நமது நோக்கம், எந்தவகையான பைபிள் வைத்திருந்தாலும், மாணவர்கள் பதிலெழுதக்கூடியவர்களாகத் திகழவேண்டும் என்பதே.
- எல்லாப் பாடங்களும் சரியாக இருக்கும் பட்சத்தில், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் என்ற வகையில் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் கொடுக்கப்படுகிறது.
- நிலை 3 – குறிப்பிட்டதுபோல, ஒரு பதிலுக்கு 1 மதிப்பெண் வழங்கவேண்டும்.

**நிலை 4 ஆராய்ச்சிகள்**

- நிலை 3ல் உள்ள மாணவர்களுக்கு இவை கடினமான பாடங்களாகும்.
- சிக்கலான கேள்விகளும் பதில்களும் தேவைப்படுகின்றன.
- எல்லாப் பாடங்களும் சரியாக இருக்கும் பட்சத்திலும் பதில்கள் முழுமையானவைகளாக இருக்கும் பட்சித்திலும், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் என்ற வகையில் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் கொடுக்கப்படுகிறது.

**மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகள்**

ஆசிரியர்கள் முதலில் இதைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- ஒவ்வொரு பாடத்தையும் சரிபார்த்துவிட்டு, சரியான அல்லது சரியல்லாத பதிலை அடையாளம் செய்யுங்கள்.
- சொல்லியிருக்கிறபடி தேவையான கருத்துக்களை தாருங்கள்.
- கான்ட்ராஸ்ட் கலரை பயன்படுத்தி, ஒவ்வொரு பதிலையும் டிக் செய்யுங்கள்.
- தேவையான இடங்களில் சரியான பதிலை எழுதுங்கள், எழுத்துப்பிழை இருந்தால் திருத்துங்கள், இதனால் மதிப்பெண் குறைக்கப்படுவதில்லை.
- அரைகுறையான பதிலுக்கு குறைவான மதிப்பெண் அளிக்கவேண்டும்.
- மாதத்தில் எடுக்கும் மொத்த மதிப்பெண்களைக் கூட்டி பின்பக்கத்தில் அதற்கென்று கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

மாணவர்களுக்கு அவர்களுடைய வேதஆராய்ச்சியில் இயன்றவரை எல்லாவகையிலும் தாராள மனத்தோடு ஊக்குவிப்பது உண்மையில் அவசியமானது. ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிக்கும் வார்த்தைகளை பாடப்பகுதியில் அதற்கென்று தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுவது உதவியாய் அமையும். நல்ல வர்ணம்தீட்டுதல், சுத்தம், பெற்ற மதிப்பெண்கள், மாணவர் பாடத்தைப் புரிந்துகொண்டவிதம் போன்றவற்றைப்பற்றி ஆசிரியரின் கருத்தை எழுதிவைக்கலாம்.

கருத்துக்கள் பலதரப்பட்டதாக இருக்கும்படி முயற்சிக்கிறோம். கேள்விகள், கூற்றுகள், கண்டறிந்தவை, ஊக்குவிக்கும் வாசகங்கள் போன்றவையும் பலதரப்பட்டதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சிந்தனை செய்வது இதற்கு அவசியம், ஆனால் அதே நேரத்தில் மாணவர்களின் உற்சாகம் களைகட்டியிரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒரேவிதமான வாசகமும் ஒரேவிதமான கேள்வியும் மீண்டும் மீண்டும் வருமானால் அது தாக்கம் குறைந்து பலனற்றதாகிவிடும்.

### நிலை 3

**பொதுவான கருத்துக்கள்**

'நல்ல வேலை! நீ கேள்வியை கவனமாக வாசித்திருக்கிறாய் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குறிப்பாக கடைசி கேள்விக்கு நீ அளித்திருக்கும் பதிலில் நல்ல வார்த்தைகளை பயன்படுத்தியிருப்பது எனக்கு பிடித்திருக்கிறது'.

'யோவான்' நீ நல்ல முறையில் கடினமாக உழைத்திருக்கிறாய். நீ எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க முயன்றிருப்பது பெரிய காரியம். விடுபட்டவற்றை நான் உனக்காகப் பூர்த்திசெய்திருக்கிறேன்'.

**ஆவிக்குரிய அபிப்பிராயங்கள்**

'மோசேயுக்கு இஸ்ரவேல் ஜனங்களோடு கடினமான சமயங்கள் சிறிது காலம் உண்டாயிருந்தது, ஆனால் மோசேயே எல்லாப் பிரச்சனைகளையும் கையாள தேவன் அனுமதிக்கவில்லை'.

‘தேவனை நேசிக்கவேண்டும் என்று தன்னுடைய தகப்பன் தன்னிடம் போதித்ததை யோசேப்பு ஒருபோதும் மறக்கவில்லை. வீட்டைவிட்டு வெகு தூரத்தில் இருந்தபோதும்கூட அவன் அதை மறக்கவில்லை’.

‘கர்த்தராகிய இயேசுவின் அருகில் செல்லவேண்டும் என்று பர்த்திமேயு தீர்மானித்திருந்தான். அவன் ஏமாற்றமடையவில்லை, ஏனென்றால் அவனால் இப்பொழுது பார்க்கமுடிகிறது, மேலும் இயேசு உண்மையில் விசேஷமானவர் என்று அறிந்துகொண்டான்.’

## நிலை 4

### பொதுவான அபிப்பிராயங்கள்

‘மீண்டும் நல்ல பாடங்கள். நீ இந்த பைபிள் கதைகளைப்பற்றி நன்றாக புரிந்துகொண்டிருக்கிறாய், அவைகளை ரசித்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். இந்தப் பாடங்களைப் படித்துமுடிக்க நன்றாக நேரம் செலவிட்டதற்காக நன்றி. இவைகளை வேகமாக வாசித்துமுடிப்பது எளிதாயிருக்கும், எனவே உனது முயற்சியைப் பாராட்டுகிறேன்’.

‘ராகேல் இது நல்ல முயற்சி. நீ கதையை நன்றாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நீ எழுதிய பதிலிருந்து அறிகிறேன். மீண்டும் நீ இதை வாசிக்க முயற்சித்தால் நல்லது’.

### ஆவிக்குரிய அபிப்பிராயங்கள்

‘பரலோகத்துக்குரிய அல்லது ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியிருக்கும் பூலோகக் கதைகளே உவமைகள் என்று சிலவேளைகளில் அழைக்கப்படுகின்றன. ஆராய்ச்சி 3ல் உள்ள உவமையில் அடங்கியுள்ள ஆழமான அர்த்தம் என்ன என்று நினைக்கிறாய்?’

‘ஸ்தேவான் மிகவும் கொடூரமான முறையில் மரணமடைந்தார், ஆனாலும் அவர் மரிக்க பயப்படவில்லை, ஏனென்றால் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்றும், தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு பரலோகத்தில் இருப்பார் என்றும் அறிந்திருந்தார்’.

bes
bible educational services

© Bible Educational Services 2015

www.besweb.com